11th December 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 இதழ்: 09 பக்கங்கள் - 12 editor.uthayam@gmail.com

## 2 மணி நேரத்துக்கே மத்ரஸா நடத்த அனுமதி

### சாய்ந்தமருது மத்ரஸா பற்றி பணிப்பாளர்

தினமொன்றுக்கு 2 மணிநேர குர்ஆன் வகுப்புகளை நடாத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியை பயன்படுத்தியே சாய்ந்தமருது ஷபிய்யர் ரஷ ாத் மத்ரஸா இயங்கி வந்ததாக முஸ்லிம் சமய 02ம் பக்கம்பார்க்க...

# வீட்டோவினை அடுத்து வலுக்கும் அமெரிக்க எதிர்ப்பு

## இஸ்ரேல் அமெரிக்காவுக்கு புது நெருக்கடி

(விஷேட நிருபர் எம்.என். முஹம்மட்)

அமெரிக்காவின் ஐ.நா சபையின் பாதுகாப்புசபையில் முன்வைக்கப்பட்ட உடனடி அவசர யுத்தநிறுத்தத்திற்கான கோரிக்கையை அமெரிக்கா வீட்டோ செய்திருப்பது அரபு இஸ்லாமிய மக்கள் மத்தியில் அமெரிக்காவுக்கு எதிரான பலமான எதிர்ப்பு அலைகளை தோற்றுவித்திருக்கின்றது. இது வழமையான செயற்பாடு என்றாலும் தற்போதைய சூழ்நிலையில் யுத்த நிறுத்தம் என்பது மக்களை பாதுகாக்கும் ஒரு யுத்தியாகவே அரபு இஸ்லாமிய மக்கள் பார்க்கின்றனர். அதேபோன்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தெளிவான மனித உரிமை மீறலில் ஈடுபடுவதாகவும், இது பிரச்சினையை மேலும் 02ம் பக்கம்பார்க்க...

## மின் தடை இழப்பு குறித்து துல்லியமான பகுப்பாய்வு தேவை

### பாராளுமன்றில் சஜித் பிரேமதாஸ



நாடளாவிய ரீதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதனால் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்படும் வீழ்ச்சி, நீர் விநியோகத்தில் இடையூறு, நோயாளிகள் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராட வேண்டிய 02ம் பக்கம்பார்க்க...

## மு.கா. தலைவர் ஹக்கீம் மீது சுரேன் ராகவன் பாய்ச்சல்





பாராளுமன்றத்தில் கல்வி உயர் கல்வி அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை (5) நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது அங்கு உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சப்பிரகமுவ பல்கலைக்கத்தில் போன்று, ஓர் உல்லாச பிரயாணத்துறை பீடமொன்றை அமைக்கப்படுவது அதன் வேந்தரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் விருப்பமென்று குறிப்பிட்டதைத் தொடர்ந்துஅவரது உரையின் முடிவில் 02ம் பக்கம்பார்க்க...

## அக்குரணை வெள்ளப் பெருக்குக்கு தீர்வு காணுங்கள்

### பாராளுமன்றில் றிஷாத் கோரிக்கை



அக்குரனையில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்த நிரந்தரமான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொண்டு, அந்த மக்களின் இயல்பு வாழ்வை சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை (08) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

"இலங்கை - பலஸ்தீன் 02ம் பக்கம்பார்க்க...

## பேரழிவை நிறுத்தும் முயற்சிகள் தொடரும்

### ஐ.நா. பொதுச் செயலாளர்



தோஹா மன்றத்தில் பேசிய ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், காசாவில் வெளிவரும் மனிதாபிமான பேரழிவு மற்றும் சர்வதேச சமூகத்தின் பதில் குறித்து 02ம் பக்கம்பார்க்க...

## சாய்ந்தமருது மத்ரஸா சட்ட விரோதமானது

### சட்ட நடவடிக்கை எடுக்கவும்

### நீதிக்கான மையம் திணைக்களத்திடம் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் குர்ஆன் மனனம் செய்யும் மாணவன் மர்மமான முறையில் மரணித்த சம்பவத்தோடு தொடர்புடைய மதரஸத்து ஷபீலித் ரஷாத் என்ற மதரஸா முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் ஒரு குர்ஆன் மதரஸாவாக (MRCA/QM/AM/303) பதிவு செய்யப்பட்டுள்ளது.. குர்ஆன் மதரஸாவாக பதிவு செய்யப்படும் ஒரு நிறுவனம் முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளுக்கு அமைய ஒரு ஹிப்லு மதரஸாவாக செயல்பட முடியாது. குர்ஆன் மதரசாக்கள் மாணவர்கள் 02ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## அக்குரனை...

(முன் பக்கத் தொடரச்சி)

நட்புறவுச் சங்கத்தின் செயலாளராக இருந்த முஜிபுர் ரஹ்மான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புதிய செயலாளராக டிலான் பெரேரா எம்.பி இன்றைய தினம் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, இஸ்ரேலின் அராஜகத்தை முடிவுக்குக் கொண்டுவர டிலான் பெரேரா எம்.பி தனது பங்களிப்பை நல்க வேண்டும் எனவும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், பல்வேறு அமைச்சுக்கள் தொடர்பான இன்றைய விவாதத்தில் சில விடயங்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

புத்தளம் மாவட்டத்தில் அல் ஜித்தா, ரத்மல்யாய கிராமங்களில் இருக்கும் இரண்டு பாலங்கள் சேதமடைந்து, கடந்த மூன்று வருடங்களாக அதனை புனரமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால், அந்தப் பிரதேச மக்கள் பெரிதும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். அந்த ஊருக்கு செல்வதற்கு பெருந்தடையாக இது இருப்பதனால் பாலங்களை புனர்நிர்மாணிக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். அதேபோன்று, ஏனைய இடங்களிலும் இவ்வாறு அரைகுறை வேலைகளுடன் காணப்படும் பாலங்களின் கட்டிடப் பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகின்றேன்.

மேலும், மன்னார் - புத்தளம் பாதை தொடர்பில் பலமுறை இந்தச் சபையில் சுட்டிக்காட்டிய போதும் இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன், மன்னார், முசலிப் பிரதேசத்தில் அளக்கட்டு எனும் புதிய மீள்குடியேற்ற கிராமத்தில் பாதைகள், பாலங்கள் உடைந்திருந்த போதும் அவற்றை செப்பணிடப்படவில்லை. ஒரு இலட்சம் கிலோமீட்டர் பாதை புனரமைப்புத் திட்டத்திலும் இது உள்வாங்கப்படவில்லை.

அக்குரனையில் தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். அந்தப் பிரதேச மக்களுக்கு அண்மையில் 300 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் 120 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. எனவே, இதற்கு நிரந்தர வேலைத்திட்டம் ஒன்று தேவை. வெளிநாட்டு உதவிகளைப் பெற்றாவது இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணுங்கள்.

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகவும், இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அண்மையில் கூறினார். எனவே, அதனை துரிதமாக மேற்கொள்ளுமாறும் அதன் மூலம், மன்னாருக்கு மட்டுமன்றி முழு நாட்டுக்கும் நன்மை கிடைக்க வழி சமைக்குமாறும் வேண்டுகின்றேன். - என்றார்.

## 2 மணி...

(முன் பக்கத் தொடரச்சி)

கலாச்சார பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் தெரிவித்தார்.

13 வயது மாணவர் ஒருவர் மர்மமாக மரணித்த மத்ரஸா தொடர்பாக எடுக்கவிருக்கும் நடவடிக்கை தொடர்பாக கேள்வியெழுப்பிய போதே பணிப்பாளர் இதனை தெரிவித்தார்.

மத்ரஸா தொடர்பாக எடுக்கும் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி ஆராய்வதற்கு புத்தசாசன சமய விவகார கலாச்சார அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க எதிர்வரும் திங்களன்று ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

அதேவேளை சாதாரண குர்ஆன் மத்ரஸாக்களை நடாத்துவதற்கு அனுமதி பெற்று அவை அரபுக்கல்லூரிகளாக நடாத்தப்படுவதாக சாடிய பணிப்பாளர் இவற்றை கண்காணிப்பதற்கான ஆளணிப்பற்றாக்குறை திணைக்களத்தில் காணப்படுவதாகவும் தெரிவித்தார். சம்பவம் இடம்பெற்ற ஷபிய்யுர் ரஷாத் மத்ரஸாவின் மாணவர்களுக்கு அடிப்படை வசதிகள் கூட இருக்கவில்லை எனவும், படுப்பதும் படிப்பதும் கூட ஒரே இடத்தில் தான் எனவும் பணிப்பாளர் மேலும் தனது அவதானங்களை வெளியிட்டார்.

## மு.கா...

(முன் பக்கத் தொடரச்சி)

வெகுண்டெழுந்த உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேண் ராகவன் அவ்வாறு வெளி ஆட்களின் , தனிப்பட்டவர்களின் விருப்பப்படி எதனையும் செய்ய முடியாது என்றும் முன்னர் உயர்கல்வித்துறைக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தவர் என்ற முறையிலும் , திறமையான முன்னாள்அமைச்சர் ஒருவர் என்ற முறையிலும் அவர்(ஹக்கீம்)இதுபற்றி நன்கு அறிந்திருப்பார் என்றும்,தன்னுடைய உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகளும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவரும் மற்றும் அதன் உயர் அதிகாரிகளும் அப்பொழுது பாராளுமன்றத்தில் இருப்பதாகவும் அவர்களுக்கு என்ன செய்வது என்பது தெரியும் என்றும் வெளியார் வேறு எவரும் சொல்லித்தர தேவையில்லை என்றும் மிகவும் ஆக்ரோஷமாக கூறினார்.

அதன்போது அமைதியாக எழுந்து நின்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் , இவ்வாறான ஒரு பீடத்தை கோருகின்ற பொழுது அது சம்பந்தமான உரிய ஆவணங்களுடன்தான் ஒரு வேண்டுகோளை விடுக்கவுள்ளதாகவும், பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவினர் அது சம்பந்தமாக ஆராய்ந்து உரிய தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முடியும் என்றும் எடுத்துக் கூறினார்.

அத்துடன் பிரஸ்தாப பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருடன் இராஜாங்கஅமைச்சருக்கு இருக்கின்ற பிரச்சினை வேறு விஷயம் என்றும் அது பற்றி தான் குறிப்பிட விரும்பவில்லை என்றும் கூறினார்.

உயர்கல்வி அமைச்சு சம்பந்தபட்ட விவகாரத்தில், உண்மையில் தென்கிழக்கு பல்கலைகழகத்துக்கான முக்கியமான சில பீடங்களின் அவசியம் இருந்து கொண்டிருக்கின்றது. அட்டாளைச்சேனையில் இருக்கின்ற ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் இன்று நிறைய கட்டிடங்கள் பாவிக்கப்பட முடியாத நிலையில் இருக்கின்றன. எனவே அந்த கட்டிடங்களை பாவித்து அங்கு ஒரு கல்வி பீடத்தை அமைக்கலாம் என்பதும், அதே போல மல்வத்தை என்ற பிரதேசத்தில் தென்கிழக்கு பல்கலைகழகதிற்கு இருக்கின்ற காணியை பாவித்து அங்கு ஒரு விவசாய பீடத்தை அமைக்கலாம். ஏனென்றால் ,அது நெல் உற்பத்தியில் ஆகக் கூடிய வருமானத்தை ஈட்டித் தருகின்ற பிரதேசமாகும்.

இந்த சவாலான காலகட்டத்தில் கல்வி அமைச்சை பொறுப்பேற்று வழிநடத்தி கொண்டிருக்கின்ற அமைச்சர் சுசில் பிரேமஜயந் அவ்வாறே அவருடைய இராஜாங்க அமைச்சர் மற்றும் ஏனையவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்ற அதே வேளை, சற்று முன்பு ராதாகிருஷ்ணன் எம்.பி குறிப்பிட்ட விவகாரம் சம்பந்தமாக இந்த நுவரெலியா மாவட்டத்தில் இருந்து வருகிற மாணவர்கள் ஊடாக தங்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்கள் அற்று போகின்றது என்கின்ற காரணத்தினால் அதை தடை செய்வதற்கு எடுத்த முயற்சிகளினால் உண்மையில் நுவரெலியா மாவட்டத்தின் கல்வி த்தரம் கூடியதா என்பதைதான் பரிசீலிக்க வேண்டும்.

என்னுடைய பார்வையில் அந்த மாவட்டத்தில் இருக்கின்ற என்னுடைய சொந்த ஊரான ஹபுகஸ்தலாவை அல் மின்ஹாஜ் பாடசாலை அதிக மருத்துவபீடத்துக்கான மாணவர்களைஅனுப்புவதை பொறுத்தவரை ,என்னுடைய மைத்துனியின் மகன் றோயல் கல்லூரியில் கல்வி கற்று கொண்டிருந்தவர், 10ஆம் வகுப்புக்கு வந்த போது சொந்த ஊரிலி ருந்து பரீட்சைக்குத் தோற்றி,மருத்துவ பீடத்துக்குப் போனார். ஏன் என்றால் ,குறைந்த வெட்டுப்புள்ளி என்ற காரணத்தினால் அவருக்கு அந்த வாய்ப்புக் கிட்டியது.

இன்று அவர் துறை சார்ந்த மருத்து நிபுணராக மாறியிருக்கின்றார். ஆனால், இங்கு கூறப்பட்டபடி இந்த வாய்ப்புக்கள் அந்த பிரதேச மாணவர்களுக்கும் கிடைப்பது இல்லாமல் போகும்.நல்ல திறமையான மாணவர்கள் படிக்கின்ற போது, ஏனைய மாணவர்களது திறமையும் அதிகரிக்கும். உண்மையிலேயே இந்த தடையைச் செய்த காரணத்தினால் நுவரெலியா மாவட்டத்தில் மருத்துவ பீட அனுமதி கிடைத்தது என்றால் நாங்கள் அதை வரவேற்கலாம். - என்றார்.

## வீட்டோவினை...

(முன் பக்கத் தொடரச்சி)

சிக்கலாக்குவதாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன. இந்த நிலையில் ஹமாஸ் வடகாஸாவிலிருந்து இஸ்ரேலிய துருப்புக்களை விரட்டியடிப்பதற்கான தாக்குதல்களை ஆரம்பித்திருப்பது போல் தெரிகிறது. ஏனென்றால் மிகவும் இலக்கு வைத்து நுணுக்கமாக பல தாக்குதல்களை ஹமாஸ் படையினர் இடைவிடாது நடாத்திவருகின்றனர். வடகாஸாவிலிருந்து ஹமாஸ் இஸ்ரேலை வெளியேற்றுவதில் வெற்றி காணுமாக இருந்தால் இஸ்ரேலுக்கு அது மிகப்பெரிய சவாலாக அமையும் என்பதோடு, ஹமாஸ் ஏலவே எச்சரித்துள்ளவாறு சற்றும் எதிர்பாராத மிகப்பெரும் ஆச்சரியத்தை இஸ்ரேலுக்கு உண்டுபண்ணும் திட்டங்களை இஸ்ரேல் தொடர்ந்தும் நுணுக்கமாக ஆராய்ந்து வருவதும், எந்தவகையான தாக்குதல்களை ஹமாஸ் எதிர்பாராதவிதமாக நடாத்தப்போகிறது என்பதை ஊகிக்கமுடியாமல் இஸ்ரேல் திண்டாடிவருவதும் குறிப்பிடத்தக்கது.

எது எப்படியானாலும் இந்த யுத்த நிலைமை குறைந்தபட்சம் இன்னும் 2 மாதங்களுக்கு

## மின் தடை...

(முன் பக்கத் தொடரச்சி)

நிலை போன்ற பாரிய இடைஞ்சல்கள், மட்டுமன்றி மின்சாரத்திற்காக அதிக பணம் செலவழிக்கும் நாட்டில் பாரிய பாதுகாப்பின்மைக்கு காரணம் என்ன என்பதை கண்டறிய விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந் நாட்டிற்கு உகந்த மின்சார கட்டமைப்பு தேவை என்றும், மின் சபை மறுசீரமைப்பின் போது மின் சபையை தனியாருக்கு மாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் நாட்டில் பேரழிவு நிலை உருவாகலாம் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நேற்று (09) ஒரு மின்கடத்தி பழுதடைந்ததன் காரணமாக முழு நாட்டின் மின்சார கட்டமைப்பும் எவ்வாறு தடைப்பட்டது என்பது குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை தேவை என்றும், இந்த மின்சாரத் தடையின் ஊடாக நேற்றைய தினம் நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பின் தரமான மற்றும் துல்லியமான பகுப்பாய்வு நடாத்தப்பட வேண்டும் என்றும், மீண்டும் இவ்வாறானதொரு சந்தர்ப்பம் நாட்டுக்கு ஏற்படக் கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## பேரழிவை...

(முன் பக்கத் தொடரச்சி)

உரையாற்றினார்.

அவரது கருத்துகளின் சிறப்பம்சங்கள்,

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை புவிசார் அரசியல் பிளவுகளால் முடங்கியுள்ளது, காசா போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானத்தை நிறைவேற்ற இயலாமையால் அதன் நம்பகத்தன்மை குறைமதிப்பிற்கு உட்பட்டுள்ளது.

காசா போர் போன்ற உலகளாவிய சவால்களை சிறப்பாக எதிர்கொள்ள உலகளாவிய நிறுவனங்களை கொண்டு வர தீவிர முயற்சிகள் தேவை.

ஐ.நா.வில் எனது காலத்தின் போது இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு பொதுமக்கள் உயிரிழப்புகளை நாங்கள் பார்த்ததில்லை.

## சாய்ந்தமருது...

(முன் பக்கத் தொடரச்சி)

தங்கி இருந்து படிப்பதற்கான விடுதி வசதியை வழங்க முடியாது என்பதோடு ஹிஃப்ளுா மதரஸாக்கள், அரபிக் கல்லூரிகள் மாத்திரமே மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கான வசதிகளை வழங்க முடியும்.குர்ஆன் மதரஸாவாகப் பதிவுசெய்யப்பட்ட மதரஸத்து ஷ பீலித் ரஸாத், ஹிஃபுளுா மதரஸ ாவாகச் செயல்பட்டது ஒழுங்கு விதிகளுக்கும், திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு முரணானது ஆகும்.

மேலும், இது குறித்த மேலும் கருத்து தெரிவித்த நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச். இஸ்மாயில் முஸ்லிம் கலாச்சார திணைக்களத்தின் விதிமுறைகளின்படி மதரசத்து ஷ பீலித் ரஸாத்தின் சொத்துக்கள் வக்ஃப் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மதரஸாவின் நிலம் மற்றும் வளாகம் வக்ஃப் செய்யபடாமல் தனி நபருக்கு சொந்தமானது என்ற குற்றச்சாட்டுகள்களும் இன்று எழுந்துள்ளது.

மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில், இந்த மதராசாவின் செயல்பாடுகள் குறித்து உடனடி விசாரணையொன்றை ஆரம்பிக்குமாறும் விசாரணை முடியும் வரை அதன்குறித்த மதரஸ ாவின் பதிவை இடைநிறுத்தி வைக்க நீதிக்கான மய்யம் கலாச்சார திணைக்களத்திடம் கோரிக்கை விடுப்பதோடு திணைக்களத்தின் விதிமுறைகளை வெளிப்படையாக மீறியதற்காக மதரசத்து ஷபீலித் ரஸாத்தின் நிர்வாகிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறது.

# சாதனையாளர் விருது பெறும் மூத்த ஊடகவியலாளர்கள்



இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை நிலையமும் இணைந்து நடத்தும் ஊடக விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12ம் திகதி இடம்பெறவுள்ளது.

இதலி வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் மூத்த ஊடகவியலாளர்களான ஸ்டென்லி சமரசிங்க, ஏ.டீ. மஹிந்த பால, எம்.ஏ.எம்.நிலாம், எஸ். தில்லை நாதன், சீதா ரஞ்சனி ஆகியோர் விருதுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சமயோசிதமாக முறியடிக்கப்பட்ட கடத்தல் நாடகம்!



சமீஹா சபீர்

களுபோவில ஆசிரி மாவத்தையில் வசிக்கும் முஸ்லீம் குடும்பத்தை சேர்ந்த 18 வயதுடைய தனியார் பல்கலைக்கழக மாணவர், நான் கு பேர் அடங்கிய குழுவால் கடந்த திங்கட்கிழமை (டிசம்பர் 04) கடத்தப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனும் அவனது தாயாரும், தந்தையை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறக்கிவிட்டு வீடு திரும்பிய நிலையில் தொலைபேசி அழைப்பிதழ் மூலம் இளைஞனை வெளியே வரவழைத்து கடத்தப்பட்டுளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக குறித்த தாயிடம் தொடர்பு கொண்டு வினவிய போது,

நானும் எனது மகனும், எனது கணவர் வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் விட்டு விட்டு வீட்டுக்கு வந்தோம். அந்த நேரம் எனது மகனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. " உங்களுக்கு ஒரு பார்சல் வந்து இருக்கிறது அதனை தெஹிவளை சரணங்கர ரோடு க்கு வந்து எடுத்து கொள்ளுமாறு அந்த அழைப்பு வந்தது. மகனும் என்னிடம் சொல்லிவிட்டு சென்று விட்டார்.

சென்ற மகன் இரவு முழுவதும் வரவில்லை. அவரது போனுக்கு அழைப்பு எடுத்தாலும் அவர் கதைக்கவில்லை. காலையிலும் மகன் வீட்டு வரவில்லை.

நான் உடனே கோ/ஹ வல போலீஸ்க்கு சென்று முறைப்பாடு செய்தேன்.

மதியம் 2 மணியளவில் மகனின் தொலைபேசியில் இருந்து அழைப்பு வந்தது.



மகன் பேசினார் .. உம்மா என்னை மாத்தளைக்கு கடத்தி கொண்டு வந்து இருக்காங்க என்றார். எமது காரையும், திகாரியில் உள்ள காணியயையும் எழுதி தருமாறு, கையெழுத்து போடுமாறு என்னை வட்புறுத்துகிறார்கள் எனறார்,

மகன் அவர்கள் யார் என்று நான் கேட்டேன். எமது வாப்பாவுடன் பிஸ்னஸ் செய்யும் கழுபோவில டீ பாத்தியா மவத்தையில் உள்ள இன்னாரின் மகன் என்கிறார்.

அவர்களிடம் பேச வேண்டும் என்று போனை ஸ்பீக்கரில் போடும் படி சொன்னேன். அவர்களுடன் நான் பேசினேன், அவர்கள் நாங்கள் கேட்டதை தந்தாள் தான் உங்கள் மகனை விடுவோம் இல்லையென்றால் நடக்கிறது வேற என்றார்கள்.

நான் மகனை ஒன்றும் செய்து விட்டாதீர்கள். நீங்கள் கெட்டவர்களை தருகிறேன். உங்கள் விபரங்கள் தாருங்கள் என்றேன்.

அவர்கள் பேசியதை நான் போனில் ரெகார்டிங் செய்து கொண்டு போலீசாரிடம் ஒப்படைத்தேன்.

கடத்திய நபர்கள் யார் என்று தெரிந்து விட்டது. உடனே போலஸார் சந்தேக நபர்களின் வீட்டு சென்று தந்தையை கைது செய்து போலீஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தார்கள்.

பின் மகனுக்கு அழைப்பெடுத்து அவர்களுடன் போலீசார் பேசினார்கள். உங்களது தந்தையை கைது செய்து விட்டோம். நீங்கள் கடத்திய நபரை, அவரின் காருடன் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்கள். மகனுடன் அவர்கள் 3 பேர் வந்தார்கள். அவர்கலில் இரண்டு பேர் கைது செய்யப்பட்ட தந்தையின் மகன்களாவார்கள். போலீசார் அந்த சந்தேக மூன்று நபர்களையம் கைது செய்தனர்.

இந்த கடத்தலின் பின்னணியில் உள்ள விபரங்கள் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்தது தெரிய வருவதாவது.

கடத்தப்பட்ட இளைஞனின் தந்தையும், சந்தேக நபர்களின் தந்தையும் வியாபார ரீதியாக தொடர்பினை கொண்டிருந்தவர்கள். அவர்களிடம் இருந்த பழைய மிதித்த தகராறு காரணமாகவே குறித்த இளைஞனை கடத்தியதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடத்தப்பட்ட இளைஞனிடம் போலீசார் விசாரணைகளில் மேற் கொண்ட போது,

தன்னை உங்களுக்கு ஒரு பர்ச்சல் வந்திருகின்றது சரணங்கர பாதைக்கு வரசொல்லி அழைப்பு வந்தது. நான் அந்த பாதைக்கு சென்றேன். அங்கே யாரும் இருக்க வில்லை, மீண்டும் அழைப்பு வந்தது. எண்டென்சன் ரோட்கு வருமாறு சொன்னார்கள் நான் போனதும் அங்கே இருந்த வேனில் என்னை ஏறும் படி வட்புறுத்தினார்கள். நான் ஏறியதும், என்னுடன் மூன்று பேர் வேனில் ஏறிக் கொண்டார்கள். நான்வது நபர் எனது காரை ஒட்டிக் கொண்டு வந்தார். நீண்ட நேரமாக வேன் போய்க்கொண்டே இருந்தது. அப்புறம் ஒரு வீட்டில் அறையில் என்னை கொண்டு போய் அடைத்து வைத்தார்கள். இரவு முழுவதும் என்னை விடாமல், நான் ஓடி விடாமலும் இரண்டு பேர் என்னை பிடித்து கொண்டும் இருந்தார்கள். நடு இரவில் அவர்களுக்கு கால் வந்தது. அது அவர்களின் தாய்க்கும், தந்தையுமே பேசினார்கள். இந்த கடத்தல் அவர்களின் பெற்றோருக்கும் தெரிந்தே நடந்துள்ளது.

காலையில்தான் மாத்தளையில் இருப்பதாக சொல்லில் எனது காரையும், திகாரியில் உள்ள எங்களுக்கு சொந்தமான காணியயையும் எழுதி கையெழுத்திட்டு தருமாறும் கேட்டார்கள். உனது தாய்க்கு அழைப்பெடுத்து சொல்லுமாறும் கேட்டு கொண்டார்கள். அதன் பின்னரே நான் உம்மாவிற்கு கோல் பண்ணினேன் என்று பொலிஸாரிடன் தெரித்தார் கடத்தப்பட்ட இளைஞன்.

சந்தேக நபர்களில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் தலை மறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# பதில் பொலிஸ் மாஅதிபருக்கு சர்வமத பிரார்த்தனை!



பதில் பொலிஸ் மாஅதிபராக அண்மையில் பதவியேற்ற தேசபந்து தென்னகோனுக்கு, பொலிஸ் தலைமையகத்தில் உள்ள அவரது உத்தியோகபூர்வ காரியாலயத்தில் கடந்த செவ்வாயன்று சர்வமத தலைவர்கள் ஆசிர்வதித்து, பொண்ணாடை போர்துவதையதை படத்தில் காணலாம்.

(படம்: சம்மில ரோஷான்)

# அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் பாலிகா மகா வித்யாலயம் உத்தியோகப்பூர்வ இலட்சனை வெளியீட்டு விழா

(பேருவளை பீ.எம். முக்தார்)

இலங்கையின் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியான பேருவளை, மருதான அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் பாலிகா மகா வித்யாலயம், 2024 ஆம் ஆண்டு அதன் நூற்றாண்டு விழாவை மிக விமரசையாக கொண்டாவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி புதன் கிழமை 2023 காலை 10 மணிக்கு, அதன் உத்தியோகப்பூர்வ இலட்சனை வெளியீட்டு விழாவும், முன்னாள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் அதிபர் மஸ்னவியா ரிப்கான் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் களுத்துறை வலய மேலதிக கல்விப் பணிப்பாளர் சுரஞ்சி கருணாதுங்க பிரதம அதிதியாகவும், முன்னாள் அதிபர் திருமதி ஹம்ஸா ஆரிப் கௌரவ அதிதியாகவும் களுத்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஜயகுமார், பேருவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் டப்லியு.ஏ.ஜே.யு. சோமரத்ன, களுத்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.டீ.எம். இல்யாஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொள்வர்.




www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2023 DECEMBER 11 - MONDAY

WEB: www.uthayam.lk

E-mail: editor.uthayam@gmail.com

FB ID: உதயம்

# சீர்திருத்தத்தினை நாடி நிற்கும் அரபு மத்ரஸாக்கள்

சில தினங்களுக்கு முன் சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள சபீலிர் ரஷாத் அரபு மத்ரஸாவில் இடம்பெற்ற மரணச் சம்பவம் ஒன்று நாட்டில் குறிப்பாக, முஸ்லிம்கள் மத்தியில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

அரபு மத்ரஸாக்கள் தொடர்பாக சில சக்திகளின் கழுகுப் பார்வை செலுத்தப்பட்டு வரும் நிலையில், இச்சக்திகளுக்கு நாட்டில் இயங்கும் அரபு மத்ரஸாக்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு இத் தனிச் சம்பவத்தைப் பயன்படுத்துவதற்கு முற்படுகிறார்கள்.

பதிவு செய்யப்பட்ட 310 அரபு மத்ரஸாக்களும் பதிவு செய்யப்படாத சுமார் 125 க்கு மேற்பட்ட மத்ரஸாக்களும் இயங்கி வருகின்றன. அநேகமாக இம்மத்ரஸாக்களில் நாட்டின் ஆத்மீகக் கல்வியின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றி வருகின்றனர். முஸ்லிம் சமூகத்திற்கு தலைமைத்துவம் வழங்கும் ஆளுமைகளை பல மத்ரஸாக்கள் உருவாக்கித் தந்துள்ளன.

இத் தாக்குதலின் பின் மத்ரஸாக்களைப் பதிவு செய்வதை பாதுகாப்பு அமைச்சின் பணிப்பில் இடை நிறுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி நீண்ட காலமாக அமுலில் இருந்த அல்ஆலிம் பரீட்சையும் இடை நிறுத்தப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற கல்வி அமைச்சின் இஸ்லாமிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் இது பற்றிப் பேசப்பட்ட போதும் இப்பரீட்சை தொடர்பாக உறுதியான முடிவுகள் எடுக்கப்படவில்லை என்றும் தெரிய வருகிறது. அல்ஆலிம் பரீட்சை நடாத்தப்படாமை காரணமாக ஒவ்வொரு மத்ரஸாக்களும் தமக்கு நினைத்த விதத்தில் பரீட்சைகளை நடாத்தி வருகின்றன. நல்லாட்சி அரசாங்க காலத்தில் அப்போதைய முஸ்லிம் சமய கலாசார, தபால் அமைச்சராக இருந்த எம்.எச்.ஏ. ஹலீம் அரசாங்கத்தின் அனுமதியுடன் மத்ரஸாக்களில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி ஆலோசனை முன் வைப்பதற்காக பலம் வாய்ந்த குழு ஒன்றை நியமித்திருந்தார். ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அந்தக் குழுவின் இயக்கம் இடை நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் கடந்த இரு தசாப்தங்களாக நாட்டில் புற்றீசல்கள் போன்று உருவாக்கப்பட்டுள்ள மத்ரஸாக்கள் சரியாக முகாமைத்துவப்படுத்தப்படவில்லை. பல மத்ரஸாக்கள் சில தனி நபர்களது பிழைப்புக்காக உருவாக்கப்பட்டுள்ளன. இது கலண்டர் காலமாக இருப்பதால் மத்ரஸாக்கள் நடாத்துவதற்கு பணம் திரட்டுவதற்கு இக் கலண்டர்களை விற்பதற்கு ஊர் ஊராகத் திரியும் காட்சிகளை இப்போது எங்களுக்குக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மத்ரஸாக்களை நடாத்துவது தொடர்பாக முறையான வழிகாட்டல்களை முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் வழங்க வேண்டும். மதரஸாக்கள் ஆரம்பிக்கும் போது அதற்கான சரியான வழிகாட்டல்கள் இருக்க வேண்டும். சிலர் தமது பிழைப்புக்காக மத்ரஸாக்களை ஆரம்பிக்கின்றார்கள். அது கண்காணிக்கப்படுவதும் இல்லை. இவ்வாறான மத்ரஸாக்களில் சில நேரங்களில் வேறு வேறு காரணங்களைக் காட்டியும் சிறிய மத்ரஸாக்களை ஆரம்பித்து அதிலே இந்த பெரிய மத்ரஸாக்கள் செய்கிற பணியைச் செய்கிறார்கள். முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தின் சாதாரண சிறு மட்ட மத்ரஸாக்களை நடாத்துவதற்கு அங்கீகாரம் பெற்று விட்டு, பெரிய மத்ரஸாக்கள் இயங்கி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மத்ரஸாக்களை கண்காணிப்பதற்கு போதிய ஆளணியினர் இல்லாமை முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் எதிர்நோக்கின்ற முக்கிய பிரச்சனையாகும்.

இவ்வாறான மத்ரஸாக்கள் தொடர்பாக முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் அடிக்கடி கண்காணித்து, அவர்களுக்கு எதிராக கண்டிப்பாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா உட்பட சிவில் அமைப்புகளும், புத்திஜீவிகளும் இதனை ஒரு முக்கிய பிரச்சினையாகக் கருதி, நாட்டில் அரபு மத்ரஸாக்களில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கத் தவறும்பட்சத்தில் சாய்ந்தமருது மத்ரஸா சம்பவம் போன்று மேலும் பல சம்பவங்கள் இடம் பெறுவதைத் தவிர்க்க முடியாது போகலாம்.

# மஹிந்தவின் மவுசில் மொட்டின் எதிர்காலம்?



சுஐப் எம்.காசிம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஐந்தாவது தேசிய மாநாட்டுக்கான ஏற்பாடுகள், இக்கட்சியின் சிறுபான்மை எம்.பிக்கள் இருவருக்கும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. வியாழேந்திரன் மற்றும் காதர் மஸ்தான் இருவருமே இக்கட்சியின் சார்பில் தெரிவான எம்.பிக்கள். வீதாசாரத் தேர்தலிலுள்ள விந்தைதான் இவர்களின் வெற்றியைத் தீர்மானித்தது. இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களில் இக்கட்சிக்கு செல்வாக்கு இல்லை. பேரினவாத நலன்களை அடையாளப்படுத்தியும், இனவாதத்தை உறுதிப்படுத்தியும் புறப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆரம்பமே, பாரம்பரிய தேசிய கட்சிகளைப் புரட்டிப்போட்டது.

ஆனாலும், வடக்கு, கிழக்கில் இக்கட்சிக்கு வரவேற்பு இருக்கவில்லை. இன்றைய சூழலில், இக்கட்சியின் நிலை அதிகளவு இறக்கத்தில் உள்ளது. போரியல் குற்றச்சாட்டு, குடும்ப ஆதிக்கம், இனவாதச்சாயல் மற்றும் பொருளாதாரத்தின் வீழ்ச்சி உள்ளிட்ட விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளனர் ராஜபக்ஷக்கள். இந்நிலையில், இவர்களை மீண்டும் நாடு எதிர்பார்க்கிறதா? தென்னிலங்கையில் வீழ நேரிட்ட இவர்களால் மீளவும் எழ இயலுமா? இவற்றை பரீட்சிக்கும் வெள்ளோட்டமாக இம்மாநாடு அமையலாம். மட்டுமன்றி மஹிந்தவின் மவுசை உரசிப்பார்க்கவும் இந்த மாநாடு பயன்படும்.

இவரைத் தவிர, இக்கட்சிக்கு புதிய முதலீடுகள் எதுவும் இல்லை. இதனால்தான், மஹிந்தவின் தலைமையில் மாநாடு நடைபெறுகிறது. இக்கட்சி இன்றுள்ள லட்சணத்தில் வேறொருவருக்கு தலைமையை மாற்றுவது உசிதமானதல்ல. ராஜபஷக்களல்லாத வேறு ஒருவர் தலைவராவதும் தீர்வாகாது. உள்ளதை பாதுகாக்க அல்லது கட்சியின் பலத்தை உரசிப்பார்க்க மஹிந்தவே பொருத்தமானவர். 69 இலட்சம் மக்களின் ஆணையை தாரைவார்த்ததில் நாடு நன்மையடைந்ததோ என்னவோ, பாதிக்கப்பட்டது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே.


கூட்டணி உடைந்தமை, அமைச்சுக்கள் குறைந்தமை மற்றும் கட்சியின் எம்.பியான அமரகீர்த்தி அதுகோரள படுகொலை செய்யப்பட்டதெல்லாம் நஷ்டங்கள்தான். நிறைவேற்றதிகாரம் கட்சியை விட்டுப்போனதால் ஏற்பட்ட ஓட்டைகளால் உண்டான நஷ்டங்கள் இவை. இவற்றிலிருந்து மீளும் வழிவகைள் பற்றி மாநாட்டில் மஹிந்த அறிவிக்க வேண்டும். இல்லாவிடின், இன்னமும் பலவற்றை இழக்க நேரிடலாம். ஒரு வகையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எதிர்கால தலைவிதியை தீர்மானிக்கும் மாநாடே இது.

பிரபல்யங்கள் பல ஸ்ரீலங்கா பொதுஜனவில் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புவதாக நாமல் ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பில் அடையாளங்காண இயலாத ஆருடங்கள் உள்ளதாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கட்சியின் இந்த மாநாட்டில் துல்லியமாக தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பதைப் போல, நாட்டின் பொருளாதார நெருக்கடி ராஜபக்ஷக்களின் ராஜயோகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பௌத்த தேசியவாதத்தின் தலைவனாகக் காட்டிக்கொண்டு இனியும் குடும்பச் செல்வாக்கை உயர்த்தும் கள நிலவரம் தென்னிலங்கையில் இல்லை. புலிப்பீதியைக் காட்டுவதும், முஸ்லிம் அடிப்படைவாதத்தை விளம்பரமாக்குவதும் அரசியலுக்கான உணர்ச்சியூட்டல்களே! இன்றைய சிங்களவர்களின் மனநிலைகளைப் புரிந்துகொள்ளும் தீட்சண்யம் இன்னும் மஹிந்தவுக்கு இருக்கிறது. எனவே, எதிர்பாராத அறிவிப்புக்களே மாநாட்டின் தொனிப்பொருளாக இருக்கும்.

இப்புதிய தொனிப்பொருளுக்கான சூழலை சிறுபான்மைச் சமூகங்கள் ஏற்படுத்தக் கூடாது. ஏற்படுத்தினாலும் அதை, தூக்கிப்பிடிக்கும் திராணியில் மஹிந்தவின் மவுசு இல்லை. பாதுகாப்பையோ அல்லது தேசப்பற்றையோ தூக்கி நிறுத்த முடியாதுள்ளதால், புதிய தொனிதான் இவர்களுக்கு பொருத்தமானது. சர்வதேச உதவிகள் கிடைத்து வரும் சாதக சூழலில், இதை குலைக்க அல்லது குழப்பும் செயற்பாடுகளை விமர்சித்து, தனக்கில்லாவிடினும் எதிரிக்கு நன்மை செல்வதை தடுக்கும்பாணியில் இம்மாநாடு அமையலாம்.

# திருமண பந்தத்தில் இணைய இருப்பவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு







(இர்ஷாத் இமாமுதீன்)

லைப்பொண்ட் சமூக சேவை நிறுவனம் நடாத்திய திருமண வாழ்வை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கான இலவச கற்கைநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் ஞாயிற்றுக்கிழமை ( 3) கொத்தட்டுவயில் அமைந்துள்ள NAAS Cultural Center இல் நடைபெற்றது.

லைப்பொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.ஆர்.எம். ஸரூக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ரைன்கோ நிறுவனத்தின் தலைவரும் நாடறிந்த சமூக சேவையாளருமான எஸ்.எல்.எம்.பௌஷ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அதேவேளை இன்னும் பல சமூக நிறுவனங்களின் தலைவர்களும் சமூக நலன் விரும்பிகளும் இவ்வைபவத்தை அலங்கரித்தனர்.

லைப்பாண்ட் நிறுவனம் இலாப நோக்கற்ற ஒரு சமூக சேவை நிறுவனமாகும். உத்தரவாத கம்பணியாக பதிவு செய்யப்பட்ட இந்நிறுவனம் நாடளாவிய ரீதியில் பல சமூக வேலைத் திட்டங்களை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சீனன் கோட்டை கல்வி அபிவிருத்திச் சங்கத்திற்கு மூன்றுமாடி கொண்ட புதிய கட்டிடம் அன்பளிப்பு

## இளம் இரத்தினக்கல் வர்த்தகர்களான அப்ராஸ் அப்துல்லாஹ், நைபீல் நிஸாம் ஆகியோரின் முன்மாதிரிக்கு பாடசாலைச் சமூகம் பாராட்டு!

(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளைசீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசியபாடசாலையின் பழையமாணவர்களானஅப்ராஸ் அப்துல்லாஹ் மற்றும் நைபீல் நிஸாம் ஆகியோரின் நிதிஉதவியுடன் அமைக்கப்பட்டசீனன் கோட்டைகல்விஅபிவிருத்திக் கட்டிடம் சீனன் கோட்டைபள்ளிச் சங்கதலைவர் ஏ.எச்.எம்.முக்தார் ஹாஜியார், ஜாமியாநளீமியாகலாபீடமுதல்வர் அஷ் ஷெய்க் ஏ.சி.அகார் முஹம்மத் (நளீமி) ஆகியோர் முன்னிலையில் அவர்களதுபெற்றோர்களான அல் ஹாஜ் எம்.ரி.ஏ.அப்துல்லாஹ்,அல் ஹாஜ் எம்.,ஸட்.எம்.நிஸாம் ஆகியோரினால் கடந்த 2ம் திகதி (2-12-2023) பாடசாலைஅதிபர் எம்.ஸி.,ப்றாஹிம் தலைமையில் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

சீனன் கோட்டைகல்விஅபிவிருத்திச் சங்கம் மற்றும் பாடசாலைஅபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் அல் ஹுமைஸரா தேசியபாடசாலைக்குஅருகாமையில் பலமாடிகளைஉள்ளடக்கியவாறு 23மில்லியன் செலவில் ,க் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் கல்விஅபிவிருத்திநடவடிக்கைகளுக்கானசெலவீனங்களுக்குவருமானம் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ,க்கட்டிடம் நிர்மானிக்கப்பட்டுஅண்பளிப்புச் செய்யப்பட்டமை,ங்குகுறிப்பிடத்தக்கது.

பாஸிய்யா பள்ளிவாசல் முஅத்தின் ஸஹ்றான் முர்ஸி அதான் கூறியதோடு பின்னர் அல்-குர்ஆன் ஓதப்பட்டன. அதனைத் தொடர்ந்து பள்ளிச் சங்க உப தலைவர் அஷ் செய்க் எம்.எஸ். எம்.ரில்வான் (நளீமி)நிகழ்வில் துஆ பிரார்த்தனைநடாத்தியதோடுபள்ளிச் சங்க ,ணைச் செயலாளர்களானஎம்.எம். சிஹாப் ஹாஜியார் அல் ஹாஜ் அரூஸ் அனஸ் ,ணைப் பொருளாளர்களான அல் ஹாஜ் ஏ.,ஸட்.எம்.ஸவாஹிர் அல்-ஹாஜ் ஸப்வான் நயீம் உறுப்பினர் ஏ.டப்ளியூ.எம்.நவ்பர் ஹாஜியார்,ஜாமியா நளீமியாகலாபீடசிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்-செய்க் கலாநிதிஅரபாத் கரீம் (நளீமி) பாடசாலை உப அதிபர் நைஸர் தாஹாபாடசாலைஅபிவிருத்திச் சங்கசெயலாளர் முஹம்மத் பாரிஸ் முன்னாள் செயலாளர் மிஸ்வர் காஸிம் உறுப்பினர் அல் ஹாஜ் லியாவுத்தீன் முன்னாள் உறுப்பினர்களான ஏ.ரி. எம்.பாயிஸ் ஹாஜியார்,எம்.ஐ.எம். பாகிர் ஹாஜியார்,எம்.,ஸட்.எம்.ஸ வாஹிர் ஹாஜியார் மற்றும் அஷ்-செய்க் மக்கிமன்சூர் (நளீமி),முன்னாள்நகர சபை உறுப்பினர்களான ரிஸ்வி ஸெய்ன்,சியாம் முனவ்வர், எழுத்தாளர் அஷ்ரப் யூஸுப் மற்றும் பழையமாணவர் சங்கஉறுப்பினர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள், அப்ராஸ் அப்துல்லாஹ் மற்றும் நைபீல் நிஸாம் ஆகியோரின் குடும்ப உறுப்பினர்கள் எனபலரும் பங்குபற்றினர்.

ஜாமியா நலிமியா கலாபீட முதல்வர் அஷ் செய்க் ஏ.ஸீ.அகார் முஹம்மத் (நளீமி) இன் உரையில்,


கல்வி,சுகாதாரம்,பொருளாதார மேம்பாட்டுக்காக உதவுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தர்மமாகும். இவற்றிலும் கல்வி மேம்பாட்டுக்காக கை கொடுப்பது. நிலைபேறான தர்மமாகும் கல்வி எல்லா நிலைகளிலும், எல்லா காலங்களிலும் மிகவும் இன்றியமையாத ஒரு உயர்ந்த ஸதகத்துல் ஜாலியாவாகும்.

முஸ்லிம்களின் வரலாற்றில் பேருவலை முன்னணி வகிக்கும் வரலாற்றுப் புகழ்மிக்க ஊராகும். அதேபோன்று இரத்தினங்கள் வர்த்தகத்திற்கும் சர்வதேசம் வரையில் பேர்


தொடர்ச்சி 12 ம் பக்கம் பார்க்க....
















# கூட்டு சதியின் துயரம்!

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்ரேல் என்கிற பயங்கரவாத சக்தியை யாரும் எந்தவொரு நிலையிலும் கேள்வி கேட்க முடியாது என்கிற நிலைதான் இன்று சர்வதேச அரசியலில் காணப்படுகிறது. 1200 பேரை தனது தேசத்தில் புகுந்து படுகொலை செய்ததாக ஹமாஸ் இயக்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை எழுப்பிய பெஞ்சமின் நெதன்யாகுவின் இராணுவம் இது வரை 16,000 க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்து விட்டார்கள். 40,000 க்கு மேற்பட்ட பெண்கள், குழந்தைகள்,முதியோர்களை நிரந்தரமாக ஊனமுற்றவர்களாக மாற்றி விட்டு பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று கொக்கறித்து கொண்டு இன்னும் எத்தனை ஆயிரம் பொதுமக்களை நீ படுகொலை செய்யப் போகிறாய் என சர்வதேச பொதுமக்களின் மனசாட்சி எழுப்பிய கேள்விகளுக்கு இஸ்ரேலிய இராணுவத்திடம் எந்தவொரு பதிலும் இல்லை. இஸ்ரேலிய அரசும் அதன் ஆதரவு மேற்குலகமும் தயங்காமல் பொதுமக்களை படுகொலை செய்து வருகின்றனர். யாரும் என்னிடம் கேள்வி எழுப்ப முடியாது என்கிற அரக்கத்தனமான பயங்கரவாத தாக்குதலை இஸ்ரேலிய அரசு தற்போது நடத்தி கொண்டு இருப்பதே உண்மையாகும்..இதனை விட மிகப் பெரிய கொடுமை என்னவென்றால் உலகப் முழுவதும் கிறிஸ்தவ சர்ச்களில் ஆண்டவர் இயேசுவின் சொந்த சமூகத்திற்கு வெற்றியை தாரும் என்று அடிப்படை மனசாட்சியை வட்டி கடையில் அடகு வைத்து விட்டு பலர் பிரார்த்தனை புரியும் பொல்லாங்கு சம்பவங்களும் அரங்கேறி வருவது எத்தனை கொடுமையானது என்பதை தான் நாம் அனைவரும் தற்போது சிந்தித்து முடிவு செய்ய வேண்டும்.

இது போன்ற ஒரு நிலையில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க ஆகிய இரண்டு வல்லாதிக்க சக்திகள் ஹமாஸ் இயக்கத்தினரை முற்றிலுமாக ஒழித்து விட்டு அந்த மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்து ஒரு அடிமை தேசமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் யாதார்த்தமான நீண்ட கால திட்டமாக இருக்கிறது. இந்த திட்டத்தை செயல்படுத்த யூதர்கள் மற்றும் கிறிஸ்தவ ஆட்சியாளர்கள் முடிவு செய்து அதனை செயல்படுத்த அரபு தலைவர்களிடம் அணுகினார்கள் என்கிற செய்தி தான் உண்மையாகும்.

இதற்கு மூல சக்தியாக சவுதி அரேபியாவை பயன்படுத்தி கொள்ள அவர்கள் முயலுகிறார்கள். இதற்கு துணையாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளையும், எகிப்து உட்பட சில தேசங்களை தன்வயப்படுத்தி காலப்போக்கில் காசாவை முழுமையாக தனது கட்டுக்குள் வைத்து கொள்ள முடியும் என்று அவர்கள் திட்டமிட்டு தங்கள் பணியை தொடங்கினார்கள். இந்த நிலையில் தான் அக்டோபர் 7 ந் தேதி நடைபெற்ற தாக்குதலில் தொடர்ச்சியாக இது போன்ற ஒரு துன்பத்தை யூதர்கள் சந்தித்து வருவதையும் நாம் காண முடிகிறது . இதன் மூலம் உலகில் மிகப்பெரிய மனித குலத்தின் விரோத சக்தியாக அமெரிக்கா அரசும் அதன் கொள்கைகளும் என்பது மீண்டும், மீண்டும் நிருபணம் ஆகி வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது.

இரண்டாவது சக்தியாக சவூதி அரேபியா மற்றும் அரபு தேசங்களும் இது போன்ற அநியாய சக்தியாகவே நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அரபுகளின் மத்தியில் நிரந்தர பிரிவுகளை உருவாக்கம் செய்து வெற்றி பெறுவது தான் பிரித்தானிய அரசின் கொள்கையாக இருந்துள்ளது. இந்த பிரித்தானிய நாட்டின் வாரிசுகள் தான் அமெரிக்காவை ஆண்டு வருகின்றனர். இந்த சக்திகளின் கூட்டு சதியால் தான் இன்று பாலஸ்தீன மக்கள் இது போன்ற துயரத்தை அனுபவித்து வருகின்றனர் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. மூன்றாவதாக தான் நாம் இந்த இடத்தில் யூதர்களை அடையாளப்படுத்த வேண்டும் என்பதே யதார்த்தமான உண்மையாகும். யூதர்களின் வரலாற்றில் எப்போதுமே அழிவைத் தான் சந்தித்து வருகின்றனர். மோசே காலத்தில் பார்வோன் மன்னனால் அடிமைகளாக வாழ்ந்ததை இஸ்லாமிய அடிப்படை மூல நூலான திருக்குர்ஆனில் இந்த வரலாறுகள் தெளிவான சாட்சியாக உள்ளது. அதே நேரத்தில் பைபிள் வசனங்களை நாம் பார்க்கும் போது இதே சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட சம்பவங்கள் காணப்படுகிறது. ஹிட்லர் மற்றும் ஐரோப்பிய தேசத்து மக்களால் யூதர்கள் மிக கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு இருதியாக அவர்கள் இன்றைய பாலஸ்தீன பிரதேசத்தை தன்வயப்படுத்தி கொண்டார்கள் என்பதே உண்மையாகும்.

1908 ம் ஆண்டு கிறிஸ்தவ ஆட்சியாளர்கள் தான் இவர்களை பாலஸ்தீன பிரதேசத்தில் குடியமர்த்தி இந்த சதியை அரங்கேற்றம் செய்து வைத்தனர்.இந்த சதியின் தலைமை தேசங்களாக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகள் இருந்து வந்ததை நாம் காண கூடியதாக இருக்கிறது. இதில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளாத அரபுகள் மீண்டும், மீண்டும் இவர்களிடம் நெருங்கிய நட்பில் இருப்பது தான் பலருக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது .

இந்த நிலையில் கடந்த வாரம் அமெரிக்கா அரசின் வெளிவிவகார துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்டன் இஸ்ரேல் மற்றும் அரபு நாடுகளின் தலைவர்களை சந்தித்து விட்டு போர் நிறுத்தம் ஏற்பட வழி வகையை செய்ய வேண்டும் என்று பொது அறிக்கை விடுவிக்கிறார்.அவர் அங்கிருந்து புறப்பட்டு சென்ற நிலையில் உடனடியாக இஸ்ரேலிய மனித விரோத இராணுவம் பொதுமக்களை படுகொலை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியாவின் ஆதரவு இல்லாமல் இஸ்ரேலிய இராணுவம் இந்த படுகொலையை ஒரு போதும் செய்ய வாய்ப்பே இல்லை என்பதே மத்திய தரைக்கடல் பகுதியில் மையப்படுத்தப்படும் அரசியலை தெரிந்தவர்களுக்கு இதனைத் புரிந்து கொள்ள அதிக காலம் தேவையில்லை என்பதே உண்மையாகும்.. வெளிப்படையாக அமெரிக்கா போர்நிறுத்தம் என்கிற வார்த்தையை பயன்படுத்தி விட்டு யூத இராணுவம் பாலஸ்தீன மக்களை படுகொலை செய்ய எல்லா வகையிலும் துணை போவதை நாம் காண முடிகிறது. இஸ்ரேலிய நாட்டிற்கு தேவையான இராணுவ தளவாடங்களை முழுமையாக அமெரிக்கா அரசு தான் சப்ளை செய்து வருகிறது. அதுமட்டுமின்றி போர் காலத்தில் தேவையான 14 .2 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியை ஒதுக்கிடு செய்ய செனட் சபையில் விவாதிக்கப்படுகின்றது. இஸ்ரேலிய இராணுவத்தின் தொழில்நுட்ப அறிவை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் அமெரிக்காவின் கட்டளையை ஏற்க இஸ்ரேல் மறுத்து காசாவின் மீது தொடர் போரை நடத்தி வருகிறது என்பது எந்த விதத்திலும் நம்ப கூடியதாக இல்லை என்பதே உண்மையாகும்.

இந்த அரசியல் விளையாட்டு தொடரும் நிலையில் மீண்டும் ஹாமாஸ் படையினரை இல்லாமல் ஆக்கப் போவதாக கூறி கொண்டு மீண்டும் கான் யூனிஸ் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீண்டும் பொதுமக்களை படுகொலை செய்து வருகிறது இஸ்ரேல் ராணுவம்.

ஆனாலும், யூதர்கள் இனி உலகில் நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலையை பெஞ்சமின் நெதன்யாகு உருவாக்கி கொடுத்துவிட்டார் என்பதை நாம் மறுக்க முடியாது. பெஞ்சமின் நெதன்யாகுவின் மீது சுமத்தப்பட்ட ஊழல் வழக்குகள் மற்றும் அரசியல் பின்னடைவை சரி செய்யவே அவர் இது போன்ற கடும் போக்கை மேற்கொண்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கே முதலாவதாக அமெரிக்காவின் மத்திய தரைக்கடல் அதிகார ஆசை, சவூதி அரேபியாவின் சுய நலம், முன்றாம் நிலை பெஞ்சமின் நெதன்யாகுவின் அரசியல்.

சவூதி அரேபியாவின் அச்சத்திற்கு காரணம் என்னவென்றால் ஒரு வேளை மத்திய தரைக்கடல் பகுதியில் இஸ்லாமிய ஜிஹாதிய படைகள் வலுவான சக்தியாக மாறும் போது வருங்காலத்தில் மன்னர் ஆட்சி முடிவுக்கு வரலாம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. சவூதி அரேபியா வெளிப்படையாக போர் நிறுத்தம் என்று கூறினாலும் இயற்கையாக சவூதி அரேபியா அமெரிக்கா அரசிடமே முழுமையாக தம்மை ஒப்பு கொடுத்துள்ளது என்பதே யாதார்த்தமான நிலையாக இருக்கிறது.

அமெரிக்கா மத்திய தரைக்கடல் பகுதியில் சவூதி அரேபியா மற்றும் இஸ்ரேலிய அரசிடம் வலுவான கூட்டமைப்பை உருவாக்கி தன்னை முழுமையாக நிலைநிறுத்திக் கொள்ள எடுக்கும் முயற்சி தான் பாலஸ்தீன பொதுமக்களின் படுகொலை என்பதை நாம் புரிந்து கொள்ள அதிக காலம் தேவையில்லை என்பதே உண்மையாகும்....

காசா மீது இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்தி வரும் நிலையில். உலக சந்தை பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மை நிலவி வருகிறது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நடைபெற்று வரும் மோதல் காரணமாதக இஸ்ரேலிய பங்குகளில் செய்யப்பட்டுள்ள பெரும்பாலான முதலீடுகள் திரும்ப பெறப்பட்டுள்ளன. இதனால் அமெரிக்க டாலருடன் ஒப்பிடுகையில் இஸ்ரேலிய ஷகர் கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளில் இல்லாத மிக குறைந்த மதிப்பை எட்டியுள்ளது.

இதற்கிடையில் பெஞ்சமின் நெதன்யாகுவின் அரசியல் மிகவும் மோசமடைந்தது வருவதையும் நாம் காண முடிகிறது. அமெரிக்கா அரசு தற்போது மிகுந்த பொருளாதார சிக்கலை சந்தித்து வருகிறது . அமெரிக்கா பொருளாதார பின்னடைவு காரணமாக அங்கே எல்லா துறைகளிலும் பொருளாதார மந்தநிலை நிலை தொடருகிறது. இந்த நிலையில் அமெரிக்காவின் ஆயுத பலத்தை முழுமையாக நம்பியே இஸ்ரேலிய அரசும் அதன் இராணுவ தலைமையும் போரில் ஈடுபட்டு வருகின்றனர் . ஆனால், உண்மையில் அமெரிக்கா தொடர்ந்து இஸ்ரேலிய அரசுக்கு ஆயுதங்களை சப்ளை செய்வதை தொடர முடியாத சூழ்நிலை காணப்படுவதாக சர்வதேச பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது. இதற்கு காரணம் அமெரிக்கா சந்தித்து வரும் பொருளாதார பின்னடைவே இதற்கு காரணமாக அமைந்துள்ளது என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை என்பதே சர்வதேச வல்லுனர்களின் பார்வையாக உள்ளது. எனவே தான் அமெரிக்கா வெளி விவகார அமைச்சர் ஆண்டனி பிளிங்டன் போர் நிறைவு பெற வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அமெரிக்கா சபைகளில் இஸ்ரேலிய இராணுவத்திற்கு அவசர கால நிதியை ஒதுக்கிடு செய்ய முடியாது என்கிற கைவிரிப்பு மற்றும் விவாதங்கள் தொடருகிறது. நிச்சயமாக வரும் காலங்களில் அமெரிக்கா அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சிக்கு மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இந்த நிலையில் ரஷ்யா அதிபர் புதின் அவசர அவசரமாக சவூதி அரேபியா சென்று கிரவுன் பிரின்ஸ் சால்மானை சந்தித்து பேசினார்.ஈரான் அதிபர் ரஷ்யாவுக்கு பயணம் செய்து ராஜ்ஜிய ரீதியான கொள்கை மற்றும் ஆயுதங்கள் கொள்முதல், தொழில்நுட்ப அறிவு பரிமாற்றம் குறித்து பேச போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் இஸ்ரேலிய பொருளாதாரம் மிகப்பெரிய அளவில் வீழ்ச்சி சந்தித்து வருவதாக சர்வதேச ஏடுகள் தெரிவித்துள்ளது. இந்த போர் முடிவில் இஸ்ரேல் மிகப்பெரிய அளவில் பொருளாதார பாதிப்பை உணரும் என்று அந்த நாளிதழ்கள் சுட்டி காட்டி உள்ளது. இஸ்ரேலில் தற்போது 9,50000 வேலைகள் காலியாகி உள்ளது.காரணம் 3,00000 இலட்சத்திற்கும் மேற்பட்ட இஸ்ரேலிய தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பல்துறை நிபுணர்கள் ரிசர்வ் படைகளில் தொடர்ந்து பணியாற்றும் சூழ்நிலையில் இஸ்ரேல் நாட்டில் எல்லா துறைகளிலும் மிக கடுமையான முடக்கம் காணப்படுகிறது. ஆண்டிற்கு பல இலட்சக்கணக்கான மக்கள் சுற்றுலா துறை சார்பில் இஸ்ரேல் நாட்டிற்கு பயணிக்கும் நிலையில் தற்போது

தொடர்ச்சி 07ம் பக்கம் பார்க்க..



05ம் பக்கத் தொடர்ச்சி...

யாரும் அங்கு வரவில்லை. இஸ்ரேலிய அரசுக்கு சொந்தமான பல்வேறு ஏர் வேஸ் நிறுவனங்கள் முழுமையாக செயலிழந்த காணப்படுகிறது.

இதனைத் அடுத்து கட்டுமான நிறுவனங்கள், விவசாய உபகரணங்கள் தயாரித்தல் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிரிடுதல் போன்றவைகளை செய்ய அங்கு ஆள் பற்றாக்குறை நிலவுகிறது. பல ஆயிரக்கணக்கான தங்கும் விடுதிகள், உள்ளூர் வாகனங்கள் இயக்கம், ஏற்றுமதி, இறக்குமதி துறைகள், கல்வி மற்றும் நிபுணத்துவ சார்ந்த தொழில் நுட்ப ஆராய்ச்சி துறைகள், உயர் கல்வி துறைகளிலும் பெரிய அளவில் முடங்கி உள்ளது. இதன் காரணமாக இஸ்ரேலிய நாட்டில் வங்கி துறைகளில் எந்தவொரு செயல்பாடுகளும் இல்லை என்பதை யதார்த்தமான நிலையாக உள்ளது.

தற்போது நடந்து வரும் இந்த போரில் ஹமாஸ் இயக்கம் மிகவும் கடுமையான முறையில் பல்வேறு தொழில் நுட்ப யுக்திகளை கையாண்டு இஸ்ரேலிய இராணுவத்தினரை எதிர்த்து தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள் இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான இஸ்ரேல் ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.ஆனால் , இஸ்ரேலிய இராணுவ தலைமை இந்த செய்தியை தொடர்ந்து மறுத்து வருகிறது. அதேநேரத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் இஸ்ரேல் ராணுவத்தை சேர்ந்த 100 க்கு மேற்பட்டவர்கள் கொத்து கொத்தாக கொல்லப்படுவதாகவும் அதற்கு அவர்கள் House'-- Borne தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருவதாக சர்வதேச ஆய்வு நிறுவனமான Institute for the study of war (ISW) தெரிவித்துள்ளது. இந்த உழரளந -- டீழசநெ தொழில்நுட்ப தாக்குதலில் கட்டடத்தில் நுழைந்த பல இஸ்ரேலிய இராணுவத்தினர் கட்டம் வெடித்து சுக்கு நூறாக நகர்ந்த நிலையில் கொல்லப்படுவதாகவும் சர்வதேச தொலைக்காட்சி செய்திகளை வெளியிட்டுள்ளது. மேலும் ஹமாஸ் இயக்கத்தினர் RPG கருவிகள் மூலம் ஆண்டி டேங்கர்கள் முறையை பயன்படுத்தி இஸ்ரேவேல் டேங்கர்களை சிதறடிக்கும் வண்ணம் தாக்குதலை நடத்தி வருகிறார்கள். அதேநேரத்தில் ஸ்னீப்பர் குண்டுகளை குறி பார்த்து சுடுதல் மூலம் பல இஸ்ரேலிய இராணுவத்தினர் கொல்லப்படுவதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. ஆனால் இஸ்ரேலிய இராணுவ தலைமை தளபதி இதனை தொடர்ந்து மறுத்து வருகிறார். இது போன்ற தாக்குதலை சந்திக்க நேரிடும் போதெல்லாம் இஸ்ரேலிய இராணுவம் வெறித்தனமான முறையில் பொதுமக்களை தாக்கி படுகொலை செய்து வருவது வாடிக்கையாகி வருகிறது.

இதே நிலையில் இஸ்ரேலிய இராணுவத்தில் பணியாற்றிய வரும் பலரும் பணியில் இருந்து பின்வாங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

IRGC chief claimed that 2,000 troops have deserted the Israel army in recent weeks..

இதற்கிடையில் நேற்று அல் ஜசீராவின் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் ஒசாமா ஹமாதான் எந்த ஒரு நிலையிலும் இனி பெஞ்சமின் நெதன்யாகுவிடம் சமாதானம் செய்து கொள்ளப் போவதில்லை என்றும் இறுதி வரையில் தாங்கள் தொடர்ந்து போர் புரிய போவதாகவும் தெளிவாக தெரிவித்துவிட்டார்கள். அதேநேரத்தில் ஹமாஸ் இயக்கம் இடையில் ஏற்பட்ட போர் நிறுத்தத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் புதிய ஏவுகணைகள் மற்றும் வெடிபொருட்களை ஏராளமாக சேமித்து விட்டதாக கூறப்படுகிறது.

உண்மையில் இஸ்ரேல் அரசும் அதன் தலைமையும் தற்போது மிகுந்த சிக்கலில் இருந்து வருவதாக கூறப்படுகிறது. இதற்கு காரணம் அவர்கள் எந்தவொரு நிலையிலும் ஒரு போராளி குழுவான ஹமாஸ் இயக்கத்தினரை வெற்றி கொள்ள முடியாமல் திணறி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக கான் யூனிஸ் பகுதியில் நுழைந்து பொது மக்களை கைது செய்து சிறையில் அடைககிறார்கள். தொடர்ந்து வான்வெளியாக குண்டு வீசி குழந்தைகளையும், பெண்களையும் கொலை செய்கிறார்கள். இதற்கு எந்த காரணமும் இன்றி ஹமாஸ் தலைவர்களை கொலை செய்யும் நோக்கில் தான் குண்டு வீசியதாக பொய்யை இட்டுக் கட்டி இஸ்ரேலிய அரசும், இராணுவமும் பேசி வருகிறது.

இந்த போரின் முடிவில் ஹமாஸ் அழிக்க முடியாத சக்தியாக உருவாகி வருகிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலிய இராணுவம் காசாவின் வடக்கு பகுதியில் நுழைந்து தங்கள் ஆட்சி செலுத்தலாம் என்று கனவு கண்டால் அது பகல் கனவாகவே மாறி விடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த போரின் விளைவாக யூதர்கள் யார் என்பதையும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கிறித்தவ நாடுகளின் மனநிலை என்னவாக இருக்கிறது என்பதை மனசாட்சி உள்ள சர்வதேச மனித சமூகம் உண்மையில் புரிந்து கொள்ளும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதே நேரத்தில் இஸ்ரேலிய இராணுவம் தற்போது நடத்தி வருகின்ற A I (Artificial intelligence) வகை தொழில்நுட்ப ஏவுகணை தாக்குதல்கள் மூலம் பல அப்பாவி பொதுமக்கள் தினமும் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர் என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.இது போன்ற செயற்கை தனமான யுசவகைைஉயைட வைெநடடபைநெஉந தாக்குதலை ஏமாற்று வண்ணம் ஹமாஸ் பல்வேறு வடிவங்களில் யுக்திகளை கையாண்டு வருகின்ற இந்த நிலையில் தவறான இலக்குகளை தாங்கமுடியாத இஸ்ரேலிய இராணுவம் அப்பாவி பொதுமக்களை தொடர்ந்து படுகொலை செய்து வருகின்றனர். எல்லா வகையிலும் தோல்வியடைந்த இஸ்ரேலிய இராணுவம் கடைசியாக கடல் நீரை சுரங்கப்பாதை வழியாக செலுத்தி செயற்கையான வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தி ஹமாஸ் இயக்கத்தினரை அழித்து விட கங்கணம் கட்டிக் கொண்டு வேட்டையாடி வரும் நிலையில் அதுவும் சாத்தியம் இல்லை என்பதே உண்மையாகும். இஸ்ரேல் ராணுவம் தற்போது காசவிலும், கான் யூனிஸ் பகுதியிலும் மிகவும் கடுமையான உயிர் இழப்புகளை சந்தித்து வருகிறது. அமெரிக்கா தொடர்ந்து ஆயுதங்களை இஸ்ரேலிய இராணுவததிற்கு சப்ளை செய்ய முடியாத சூழ்நிலை விரைவில் உருவாகும் என்கிற கருத்து சர்வதேச அளவில் பேச்சு பொருளாக அமைந்துள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேலிய இராணுவம் சர்வதேச அழுத்தத்திற்கு உள்ளாகி வருகிறது. இனி அதிக காலம் இதே நிலையை தொடர முடியாத சூழ்நிலை காணப்படுவதாக சர்வதேச பார்வையாளர்களின் கருத்தாக அமைந்துள்ளது.

இஸ்ரேலிய நாட்டில் மிக கடுமையான மக்கள் புரட்சி விரைவில் எழுதக்கூடிய அளவுக்கு நிலைமைகள் மாறும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.அதே நேரத்தில் இஸ்ரேல் நாட்டில் வீசப்படும் ஏவுகணைகள் மூலம் பல்வேறு ராணுவ தளங்கள் மற்றும் பொதுமக்கள் கொல்லப்படுவதாக சர்வதேச செய்தி ஏஜென்சிகள் தெரிவித்துள்ளது. ஆனால் இஸ்ரேலிய இராணுவ தலைமை இதனைத் ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது.

இறுதியாக ஒன்றை மட்டும் நாம் கூற முடியும்.இந்த போரின் முடிவில் இஸ்ரேவேல் தேசம் மிகப் பெரிய அளவில் அழிவை சந்திக்கும் என்பதில் ஐயமில்லை. தற்போதைய நிலையில் அந்த தேசம் ஒட்டு மொத்த மனித சமூகத்தின் சாபத்தை பெற்றதாக மாறி விட்டது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை . மனித குலத்தின் சாபத்தை பெற்று விட்ட ஒரு சமூகம் , இனி எந்த ஒரு நிலையிலும் தலை நிமிர்ந்து பயணிக்க கூடிய சாத்தியம் ஒரு போதும் இல்லை.

இதுவே இந்த கட்டுரையின் சாரம்சமாக நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வில் 13 மாணவிகள் சித்தி



*கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்திலிருந்து இந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுள் 13 பேர் சித்தியடைந்துள்ளனர்.இப் பெறுபேற்றின் அடிப்படையில் கம்பஹா கல்வி வலயத்தில் 10ஆம் இடத்தையும் கோட்ட மட்டத்தில் 3ஆம் இடத்தையும் பெற்று இப் பிரதேசத்தின் முன்னணி முஸ்லிம் பாடசாலையாக உள்ளது குறிப்பிடத்தக்கது.அதிபர் எம் எம் சர்ஜூன் பிரதி அதிபர் எம் ஆர் எப் பஹ்மிதா வகுப்பாசிரியை எம் எப் என் மஸாயா ஆரம்ப பிரிவு பகுதித் தலைவி எம் எம் கே மௌபியா ஆகியோருடன் சித்தியடைந்த மாணவிகள் காணப்படுகின்றனர்.*

*சித்தியடைந்த மாணவிகள்:*

*எம்எஸ் ஹாலா 155 ஆர் ஏ ஆலா 180, எம் ஐ இஸால் 152, எம் ஆர் எப் ராஷிதா 166, ஐ எச் மன்ஹா 180, டீ எப் ஸைரின் 153, ஆர் எம் ஆயிஷா171, எம் எஸ் ஆஸியா 159, எம் ஆர் எப் ரீமா 152, ஏம் ஜி லீனா 159, எம் ஆர் ஸீமா 147, எம் ஐ எப் ஹனா 157, எம் ஆர் ருகையா150*

# "Srilankan Western Lions Sarong Night in Melbourne"





*மேற்கு புறநகரில் வசிக்கும் இலங்கை சமூகம் அதன் “வருடாந்த சரோங் இரவை” 2023 டிசம்பர் 2 ம்தகதி அன்று விக்டோரியா, மெல்போர்னில் உள்ள ஃப்ரேசர் ரைஸ் குழந்தைகள் மற்றும் சமூக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. வெஸ்டர்ன் லயன்ஸ் என்பது அவுஸ்திரேலியாவின் மேற்கு புறநகர்ப் பகுதியான மெல்போர்னில் உள்ள இலங்கை முஸ்லிம் சமூகத்திற்காக பல்வேறுபட்ட சேவைகளை செய்யும் நனமதிப்பை பெற்ற அமைப்பாகும். “சரோங் இரவு”தங்கள் குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுடன் நேரத்தை செலவிட ஆஸ்திரேலியா வந்த ஏராளமானோர் அவர்களது குடும்பத்தினருடன் கலந்துகொண்ட நிகழ்வாக இருந்தது. குழந்தைகள்,சிறுவர்கள் மற்றும் கலந்து கொண்ட ஆண்,பெண் அனைவருக்கும பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன, அதைத் தொடர்ந்து வருகை தந்த அனைவருக்கும் இலங்கையின் பாரம்பரிய உணவு வகைகளை கொண்ட இரவு உணவும் வழங்கப்பட்டன.*

# நான் இறந்தாலும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தை நிறுத்த மாட்டேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

ஊழல்,மோசடி, திருட்டு,வீண்விரயம் என்று நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளதாகவும், ஊழல் மோசடிகள் மூலம் வங்குரோத்து நாட்டை அழிக்கும் திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிழலில் இருந்து செயற்படுத்தப்படுவதாகவும், நாட்டை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் இந்த ஊழல் மற்றும் மோசடிக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மினுவாங்கொடை நகரில் இடம்பெற்ற மினுவாங்கொட ஜனபவுர மக்கள் பிரதிநிதிகள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில்,

சில தலைவர்கள் கோப்புகளை தூக்கிக் கொண்டு கூட்டங்களுக்கு வந்து ஊழல் பேரங்கள் குறித்து பேசி ஆட்சிக்கு வந்ததும் தண்டிப்போம் என்று கூறினாலும்,ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இந்நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்ச குடும்பத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தது நாட்டை வங்குரோத்தாக்கியதன் மூலம் அடிப்படை உரிமைகளை



மீறினார்கள் என்ற தீர்ப்பைப் பெற நடவடிக்கை எடுத்ததாகவும்,இவை அனைத்தும் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்றும், ஐக்கிய மக்கள் சக்தி கோப்புகளை காட்டி பொய்யான நடவடிக்கைகளை நடத்துவதில்லை என்றும்,

ஊழலுக்கு எதிராக முன்நிற்கிறோம் என்று கூறும் சில தரப்பின் பொய்யை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உண்மையாகவும் தூய்மையாகவும் ஐக்கிய மக்கள் சக்தியானது திருடர்களுடன் எந்த டீல்களையும் மேற்கொள்ளவில்லை என்றும், ஐக்கிய மக்கள் சக்தி திருடர்களை பிடிக்கும் வேலையை ஆரம்பித்துள்ளதாகவும்,

உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் நாட்டையே வங்குரோத்தாக்கியவர்களை வெளிக்கொணர முடிந்ததாகவும்,

தற்போது கிராமம்,நகரம்,என அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களிடம் கையெழுத்து திரட்டும் பணி நடந்து வருவதாகவும்,இந்த மனுவின் மூலம் நாட்டை வங்குரோத்தாக்கிய 220 இலட்சம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறிய அனைவருக்கும் எதிராக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு குடியுரிமைகளை இல்லாதொழிக்கும் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி பொறுப்பெடுத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த வழக்கின் தீர்ப்பு குறித்து பாராளுமன்றத்தில் கருத்துரைக்கும் போது குடும்ப ஆட்சிக்கு ஆதரவாக இருந்தவர்கள் பல்வேறு தடங்களை ஏற்படுத்தி தாம் கையில் வைத்திருந்த பத்திரங்களை கூட பறித்தெடுத்தனர் என்றும்,தனது உயிரைப் பறித்தாலும் இந்த திருட்டு குடும்பத்தை சட்டத்தின் முன் நிறுத்துவதை யாராலும் தடுக்க முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

# பள்ளிவாசல் மற்றும் அரபு மத்ரஸாக்களை பதிவு செய்ய ஏற்பாடுகளை செய்துதாருங்கள்

## – எம்.எஸ் தௌபீக் எம்.பி பாராளுமன்றில் கோரிக்கை –



“2019 ஈஸ்டர் தாக்குதலுக்கு பிற்பாடு பள்ளிவாசல் மற்றும் அரபு மத்ரஸாக்களை புதிதாக பதிவு செய்ய முடியவில்லை எனவும் அதற்கான ஏற்பாடுகளை செய்துதாருக்கள்” என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ் தௌபீக் தெரிவித்தார்.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சு, புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் 2024 வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதம் புதன்கிழமை (6) நடைபெற்றது. இதன்போது உரையாற்றும்போதே தௌபீக் எம். பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், யுத்தம் நிறைவடைந்து நீண்டகாலமாகியும் காணிப்பிரச்சினைகள் இதுவரையில் தீர்க்கப்படவில்லை. இது தொடர்ப்பில் பல சந்தப்பங்களில் பேசியும் உரிய அதிகாரிகளை சந்தித்தும் எந்த முடிவும் கிடைக்கவில்லை. கிண்ணியா கல்லறிப்பு காணி, உப்பாறு தளவா காணிகள், குச்சவெளி ஆலம்குளம், புல்மோட்டை மற்றும் ஏனைய உரியர்களுக்கு வழங்க நடடிக்கை எடுக்க வேண்டும் எனவும் திருகோணமலை மாவட்டத்தில் பிரதேசங் களுக்கான எல்லைகள் நிர்ணயிக் கப்படவேண்டும் எனவும் தெரித்தார்.

திருகோணமலை மாவட்டமானது சுற்றுலாத்துறைக்கு பிரசித்தி பெற்ற மாவட்டம் என்பதால் அதற்கான

அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கோள்ளுமாறும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உத்தியோகத்தர்தர் குறைபாடு காணப்படுவதாகவும் அதனை நிவர்த்தி செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்.

# சவூதி அரேபியாவில் மனித உரிமைகள்









சவூதி அரேபிய அரசின் அடிப்படை நிர்வாக ஒழுங்கு என்பது, நீதி, ஆலோசனை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் அமைந்தது. அந்நாட்டு அரசு, இஸ்லாமிய ஷரியாவின் அடிப்படையில் மனித உரிமைகளை பாதுகாக்கிறது. இந்த அடிப்படையில், மனித உரிமைகளை மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் சட்ட மற்றும் நிறுவன கட்டமைப்பை உருவாக்க சவூதி அரேபிய இராச்சியத்தின் அமைப்புகளும் நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. சவூதி அரேபிய இராச்சியம் 2005 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணையத்தை நிறுவியது. இது பிரதம மந்திரியுடன் நேரடியாக இணைக்கப்பட்ட ஒரு அரசாங்க அமைப்பாகும். இவ் ஆணையகம் பொதுவாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் அக்கறை கொண்டுள்ளது. அந்நிறுவனத்தின் சட்டதிட்டங்கள், ஒழுங்குகளுக்கமைய, மேற்பார்வை செய்தல் மற்றும் பின்தொடர்தல், பரிகாரம் காணுதல், ஆலோசனை வழங்கல், விழிப்புணர்வு மேற்கொள்ளல் மற்றும் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு உட்பட, அதன் பணிகளை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதிக்கும் பரந்த அதிகாரங்களை ஆணையம் கொண்டுள்ளது.

இராச்சியத்தில் மனித உரிமைகளின் மிக முக்கியமான துறைகளாக பின்வருவானவற்றைக் குறிப்பிடலாம்: பாதுகாப்புக்கான உரிமை, ஆரோக்கியத்திற்கான உரிமை, வேலை செய்யும் உரிமை, பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் மற்றும் முதியோர்களின் உரிமைகள், வளர்ச்சிக்கான உரிமை, அரசியல் மற்றும் பொது வாழ்வில் பங்கேற்பை மேம்படுத்துதல், சிவில் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் ஆதரித்தல் அவ்வாறே பல்வேறு சமூக மற்றும் பொருளாதார உரிமைகள், இதில் உள்ளடங்கும்.

மனித உரிமைகள் அமைப்புகளும் அதன் தேசிய அமைப்புகளும் கடந்த சில தசாப்தங்களாக சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளன. உலக நாடுகள் இந்த ஆண்டு மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் 75 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றன. இப்பிரகடத்தில், அனைத்து மனித உரிமைகளையும் பாரபட்சமின்றி மேம்படுத்தி, பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல் என்ற நோக்கங்களுக்காக, 2006 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மனித உரிமைகள் கவுன்சிலும் உள்ளடங்கும். சவூதி அரேபிய இராச்சியமானது, மனித உரிமைகள் துறையில் ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படையான பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. அவ்வொப்பந்தங்கள் கீழ்வருமாறு:

குழந்தை உரிமைகள் ஒப்பந்தம், சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான ஒப்பந்தம் (”சித்திரவதை ஒப்பந்தம்”, அனைத்து வகையான இன பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச ஒப்பந்தம், பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான ஒப்பந்தம், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம், ஆயுத மோதலில் குழந்தைகளின் ஈடுபாடு குறித்த குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்திற்கான விருப்ப நெறிமுறை, புகார்கள் சம்பந்தமான மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்திற்கான விருப்ப நெறிமுறை, குழந்தைகளின் விற்பனை, குழந்தைகளை விபச்சாரம் மற்றும் ஆபாசத்திற்காகப் பயன்படுத்தல் தொடர்பான ஒப்பந்தத்திற்கான விருப்ப நெறிமுறை, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட மனித கடத்தலைத் தடுக்கவும், அடக்கவும், தண்டிக்கவுமான நெறிமுறை. இவை அனைத்தும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெண்களின் உரிமைகளுடன் தொடர்புடையவை.






சவூதி அரேபிய இராச்சியமானது சிவில், பொது அல்லது தனியார் என அனைத்து மனித உரிமைத் துறைகளிலும் மனித உரிமைகளைப் பாதுகாக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தனது குடிமக்கள், அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் அல்லது நாட்டிற்கு வருகை தருபவர்கள் என சமூகத்தின் அனைத்துத் தரப்பினரதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது. மனித உரிமைகள் மற்றும் அவற்றைப் பாதுகாப்பது தொடர்பான ஏராளமான சட்ட ஏற்பாடுகளை ஆளுகைக்கான அடிப்படைச் சட்டத்தில் சேர்ப்பதன் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சவூதி அரேபிய ”விஷன் 2030” இன் இலக்குகளின் பின்னணியில், கடந்த சில ஆண்டுகளில், பெண்களின் உரிமைகள் துறை உட்பட பல்வேறு துறைகளில் பரந்த மற்றும் தரமான சட்டச் சீர்திருத்தங்களை சவூதி அரேபிய இராச்சியம் கண்டுவருகிறது. அது பெண் உரிமை, அவர்களைப் பலப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு எதிரான பாகுபாடுகளை இல்லாதொழித்தல் போன்றவற்றுக்கு பங்களிப்புச் செயதுள்ளது. இதில் முக்கியமாக பின்வருவானவற்றைக் குறிப்பிடலாம்:

2016 ஆம் ஆண்டு தனியார் சட்டம் வெளியாகி, குடும்ப விவகாரங்களை கண்காணிக்கும் பணியை மேற்கொள்வதற்காக குடும்ப விவகார கவுன்சில் நிறுவப்பட்டது. 2018 ஆம் ஆண்டு, பெண் மாற்றுத்திறனாளிகள் உட்பட மாற்றுத்திறனாளிகளைக் கண்காணிப்பதோடு அவர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஓர் உயர் சபை அமைக்கப்பட்டது.

சிவில் நிலைச் சட்டம் மற்றும் குடிமை நிலைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டமை. இத்திருத்தமானது உரிமைகள், கடமைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் போன்றவற்றில் அனைவருக்கு மத்தியிலும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்தது. மேலும் இது அனைத்து சவூதி குடிமக்களுக்கும் வேலை உரிமையை சமமாக வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்ததோடு, பாலினம், இயலாமை, வயது அல்லது வேறு எந்த வகையான பாகுபாடுகளின் அடிப்படையில் அவர்களிடையே பாகுபாடு காட்டுவதை அனுமதிக்காத விதத்தில் அமையப்பெற்றிருந்தது. அவ்வாறே, ஓய்வு பெறும் வயதுடைய ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமத்துவத்தை அடையும் வகையில், சமூகக் காப்பீட்டு ஒழுங்கு திருட்டப்பட்டமை. சவூதி சமூக விளையாட்டு கூட்டமைப்பு பெண்கள் மற்றும் பெண்கள் உட்பட சமூகத்தின் உறுப்பினர்களுக்கு விளையாட்டு நடவடிக்கைகளைப் பயிற்சி செய்வதற்கும், ஆண்களுடன் சமமான அடிப்படையில் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கும் அதிகாரம் அளிக்கிறது. 2016 ஒலிம்பிக் போட்டிகளில் சவூதி பெண்களின் பங்கேற்பு இதில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். அவ்வாறே, மனித வளங்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சகத்தினால் ”பெண்களை மேம்படுத்துதல்” என்ற முன்முயற்சி ஆரம்பிக்கப்பட்டதோடு பெண் தலைவர்களுக்கு பயிற்சி அளிக்கும் முன்முயற்சி ஆரம்பிக்கப்பட்டமையையும் குறிப்பிடலாம் என இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்தார்.

# மத்ரஸாக்களில் பாரம்பரிய சிந்தனை



- Affan Abdul Haleem -

இலங்கையில் பாரம்பரியமாக இயங்கி வரும் மத்ரஸாக்கள் பற்றிய பல்வேறுவிதமான பார்வைகள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளேயும் வெளியேயும் இருந்து வருவதை நாம் அறிவோம். இங்கு பாரம்பரியம் என்ற சொல்லினூடாக குறிப்பிட்ட ஒரு சாராரையோ அல்லது ஓரிரு இயக்கங்களையோ நான் நாடவில்லை. கிட்டத்தட்ட பல்வேறு கடயளழரசகளில் இயங்கும் மத்ரஸாக்கள் அனைத்திற்குள்ளும் ஏதோ ஒரு வகையில் பாரம்பரிய சிந்தனைத் தேக்கத்தின் படிமங்கள் இருப்பதை மனங்கொண்ட நிலையில் இதனைப் புரிந்து கொள்ளுங்கள்.

மத்ரஸாக்களின் பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறைமைகள், உட்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர் தகைமைகள், சமகாலத்தின் தேவைகளை ஈடுசெய்வதற்கான வழிமுறைகள், தொழில் ரீதியான தகைமைகளை மாணவர்களுக்கு வழங்குதல் என்பன உள்ளடங்கலாக, இன்னும் பல பகுதிகளிலும் எமது மத்ரஸாக்கள் பாரம்பரியக் கருவிகளிலேயே பெரும்பாலும் தங்கி நிற்பதைக் கண்கூடாகக் காணலாம். இந்த அனைத்திலும் மொத்தமாகவே சமகாலத்துக்கு வருகை தந்த ஒரு மத்ரஸாவைத்தானும் (ஏன் அரச தனியார் பாடசாலைகளை, அல்லது பல்கலைக்கழகங்களைத்தானும்) இலங்கையில் காண முடியாது என்ற உண்மையை உணர்ந்த நிலையில் மேற்கொண்டு படியுங்கள்.

இப்படியாக, பாரம்பரியத்துக்குள் கட்டுண்டு கிடக்கும் மத்ரஸாக்களைத் தரம் பிரித்தால், அதில் பாரம்பரியத்தின் பலவீனங்கள் பலவற்றுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும், அல்லது நவீன முறைமைகளை விட்டு மிகவும் தூரத்தில் இருக்கும், மனித உரிமைகள் பற்றிய புரிதல்களோ தெளிவுகளோ பெரிதாக இல்லாமல் இருக்கும் ஒரு 'கல்வி' நிலையத்தில், மாணவர்களது உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் அதிகமாக இருக்கும் என்ற உண்மையை நாம் கட்டாயம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

ஓர் உயிரிழப்புக்குரிய (அது கொலையாகவோ அல்லது தற்கொலையாகவோ எப்படியிருப்பினும் சரி அதற்குரிய) சூழல் ஒரு 'கல்வி' நிலையத்தினுள் காணப்படுகின்றதென்றால், அப்படியான ஒரு நிலையம் பற்றிய ஒரு மீளாய்வு கட்டாயம் தேவைப்படும் என்பதில் சந்தேகமில்லை.

உலகைப் பொருத்தவரையில், அரச பல்கலைக்கழகங்களில், தனியார் பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில், பாடசாலைகளில், ஏன் பாலர் பாடசாலைகளில் கூட கொலைகளும் தற்கொலைகளும் ஏராளமாக நடந்திருக்கின்றன. ஏன், மனித உயிர்களைக் காப்பதற்கென்றே உருவாக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்குள் கூட மனித உயிரைக் கொலை செய்கின்ற நிலைகள் கூட உலகில் தாராளமாக நடைபெற்றிருக்கின்றன. எனவே குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒரு கொலையோ அல்லது தற்கொலையோ நடந்திருக்கிறது என்ற ஒரே காரணத்துக்காக அந்த வகையான அனைத்து இடங்களையும் இழுத்து மூட வேண்டும் என்ற ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட தீர்மானத்துக்கு வருவது அறிவுடமையாகாது என்பதனை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நாம் சாய்ந்தமருதில் உள்ள ஒரு சாதாரண மத்ரஸாவில் ஒரு பதின்மூன்று வயது மாணவனின் உயிரிழப்பு இடம்பெற்றுள்ளமை தொடர்பான விஷயத்துக்கு வருவோம். நான் விசாரித்துத் தெரிந்து கொண்ட வகையில், குறிப்பிட்ட அந்த மத்ரஸாவானது ஒரு முறைமை சார்ந்து இயங்கும் ஓரிடமாக அல்லாமல், குறிப்பிட்ட ஒரு தனிநபரின் முடிவுகளுக்கும், முன்னுரிமைகளுக்கும் ஏற்ப இயங்கும் ஓரிடமாக இருந்து வந்துள்ளதாகவே அறிய முடிகின்றது.

அல்குர்ஆனைக் கற்பித்தல், இஸ்லாத்தைக் கற்பித்தல் என்பன போன்ற அம்சங்கள், ஏனைய எந்தத் துறையையும் போன்றே, அவற்றுக்கான தகைமையையும் சிறப்புத் தேர்ச்சியையும் வேண்டி நிற்கும் துறையாகும். ஆனால் மார்க்கம் தொடர்பான எமது சமூகத்தின் மொத்தமான பார்வையில் உள்ள ஏனோதானோவென்ற தன்மையும், மார்க்க விவகாரங்களுக்கு நாம் வழங்கியிருக்கும் ஆகவும் கீழ்மட்டத்திலுள்ள அதிகுறைந்த முக்கியத்துவமும்தான் இவ்வாறான டழற டிரனபநவ மத்ரஸாக்களின் பிறப்புக்கான அடிப்படைக் காரணம் என்பதை இப்போதாவது நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மறுபக்கத்தில், இலவசமாகக் கிடைக்கும் கட்டாயப் பாடசாலைக் கல்விக் காலத்தை நிறைவு செய்ய முன்பதாக, சிறு வயதிலேயே மாணவர்களையும் மாணவிகளையும் விடுதி வாழ்க்கைக்கு அனுப்புவதென்பதை சட்டத்தின் பார்வையிலும் சரி, சமூகத்தின் வளர்ச்சி என்ற பார்வையிலும் சரி மிகவுமே பிழையான செயல் என்பதுவும் நமது சிந்தையில் உறைக்க வேண்டும்.

என்னைப் பொருத்தவரையில், க.பொ.த உயர் தரத்தை நிறைவு செய்யும் வரையில் விடுதி வாழ்க்கைக்கு மாணவ மாணவிகளை அனுப்புவது பொருத்தமில்லை என்றே கருதுகிறேன். குறைந்தபட்சம், சாதாரண தரப் பரீட்சையை நிறைவு செய்யும் வரையிலேனும் மாணவ மாணவிகளை விடுதி வாழ்க்கைக்கு அனுப்பாமலிருப்பதே சாலச் சிறந்ததாகும். அதற்கு முன்பதாக பிள்ளைகளை விடுதிக்கு அனுப்புகின்ற பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் (இங்கு பெரும்பாலானவர்கள் என்பதை வரையறுக்கப்பட்ட ஒரு கணிப்பீட்டின் பிரகாரமே சொல்கிறேன்) டீனேஜ் வயதில் தமது மகன்ஃமகள் எதிர்நோக்கலாம் என்று பெற்றோராகிய அவர்கள் பயப்படுகின்ற ஏதோ ஒன்றிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு அனுப்புகிறார்கள். மாற்றமாக, பெரும் கல்விசார் இலக்குகளை மையமாக வைத்து அவ்வாறு அனுப்புவதில்லை. ஒரு பத்துப் பன்னிரண்டு வயது முதல் இருபது இருபத்திரண்டு வயது வரையில் ஒரு மத்ரஸா விடுதியில் தங்க வைத்து விட்டால் அவன்ஃஅள் எதையும் படிக்காவிட்டாலும் உருப்பட்டு வருவான்ஃஅள் என்ற மூடநம்பிக்கை இன்றளவும் எமது பெற்றோரில் ஒரு சாராருக்கு மத்தியில் இருக்கிறது.

இனி, இப்படியான மனோநிலையில் உள்ள சமூகத்தில் ஆங்காங்கே அவ்வப்போது இப்படியான மத்ரஸாக்கள் முளைக்காவிட்டால்தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும்.

எனவே சாய்ந்தமருதில் உள்ள அந்த மத்ரஸாவில் இடம்பெற்ற இந்த துன்பியல் நிகழ்வுக்கு எமது சமூகம் ஒரு வகையில் கட்டாயம் வகை சொல்லியே ஆக வேண்டும். நாம் எங்கோ விட்ட இத்தகைய தவறுகள்தான் இன்று ஒரு மரணத்துக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன.

ஆனால் ஓர் உயிர் போய்விட்டால், நாம் உணர்ச்சிவசப்பட்டு அதற்கான உடனடிக் காரணத்துக்குள் மாத்திரம் எமது கதையாடல்களை சுருக்கிக் கொள்கிறோம். வரிசையாக அடுக்கப்பட்டுள்ள அட்டைகளில் முதலாவதைத் தள்ளி விட்டால் ஒவ்வொன்றாக விழுந்து, நூறாவது அட்டையையும் விழச் செய்யும். ஆனால் நாம் தொன்னூற்றொன்பதாவது அட்டையை மாத்திரம் குறை கூறிக் கொண்டிருப்போம். முதலாவது அட்டையைத் தள்ளி விட்டவனை மறந்து விடுவோம்.

குறித்த மத்ரஸாவின் குறித்த அந்த மௌலவி ஒரு ழெவழசஜைரள உயளந என்பது கடந்த காலங்களில் இடம்பெற்ற பல சம்பவங்களுக்கூடாக உறுதியாவதாகவே அறிந்தவர்கள் கூறுகின்றனர். இது கொலையாகவோ அல்லது தற்கொலையாகவோ எதுவாக இருப்பினும் முதல் சந்தேக நபராக அவர்தான் இருப்பார் என்பது சர்வநிச்சயம். இப்போது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைக்கிறது.

'குறித்த சிறுவன் நின்றுகொண்டு சிறுநீர் கழித்ததால் மேற்படி மௌலவி அவனை கடுமையாகத் தண்டித்ததாகவும், பின்னர் அவனை ஓர் அறைக்குள் அனுப்பி வைத்ததாகவும், அதன் பின்னர் தொழுகை நேரத்திலும் அவனைக் காணாமல் இருந்த போது குறித்த மௌலவியே அவனைத் தேடிச் சென்றதாகவும், அப்போது அவன் தூக்கு மாட்டிக் கொண்டு இன்னும் உயிருடனேயே இருந்ததாகவும், பின்னர் அந்த மௌலவியே அவனைக் கீழே இறக்கி உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதாகவும், வைத்தியசாலையில் வைத்து அவன் மரணித்தாதாகவும்தான் அவர் வாக்குமூலம் கொடுத்திருப்பதாகவும்' தகவலறிந்த வட்டாரங்கள் மூலமாக அறியக் கிடைக்கிறது. எனினும் 'குறித்த சிறுவன் தூக்கில் தொங்கிய செய்தியை ஆரம்பத்தில் சொல்லாமல் அந்த மௌலவி மறைத்திருப்பதாகவும் பின்னர்தான் அதனைக் கூறியதாகவும்தான்' தகவல் கிடைக்கிறது.

பிரேதப் பரிசோதனையை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி இதுவரையில் விரிவான அறிக்கையை சமர்ப்பித்திருப்பதாகத் தெரியவில்லை. அவர் வழங்கியிருக்கும் முன்கட்ட சுருக்க அறிக்கையின் பிரகாரம் இது ஒரு கொலையா? அல்லது தற்கொலையா? என்பதை அறுதியிட்டுச் சொல்லுமளவுக்கான தடயங்கள் இல்லை என்றே உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

எமது சமூகத்தில் உள்ள சில பலவீனங்களை இங்கு சொல்லியே ஆக வேண்டும். நான் கூறும் இந்த விஷயத்தை வைத்தியர்கள் உறுதிப்படுத்துவார்கள் என்று நினைக்கிறேன்.

ஒரு ஜனாஸாவை இருபத்தி நான்கு மணி நேரத்துக்குள் அடக்கம் செய்து விட வேண்டும் என்பதில் நாம் காட்டும் அதீத ஆர்வம் காரணமாக (அது பிழையென்று நான் சொல்லவில்லை, ஆனால்) சட்டரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பல முன்னெடுப்புகளுக்கு எம்மவர்கள் தடையாக இருந்து விடுகிறார்கள். தற்கொலைகள், அல்லது சந்தேகத்துக்கிடமான மரணங்கள் நிகழ்ந்த சில சந்தர்ப்பங்களில் கூட அவற்றின் தடயங்களை மறைத்து விட்டு, தகவல்களை உரியவாறு சொல்லாமல், யாருக்காவது காசு கொடுத்து இயற்கை மரணமெய்தியதாக அறிக்கை பெற்றுக் கொண்டு, பிரேதப் பரிசோதனைக்கும் வழிவைக்காமல் அவசர அவசரமாக அடக்கம் செய்து விட்ட சம்பவங்கள் இருப்பதாக பல சந்தர்ப்பங்களில் வைத்தியர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன்.

இதனை ஒரு பெரிய சாதனையாகக் கருதிக்கொள்ளும் நிலையும் எம்மவர்களுக்கு மத்தியில் இருக்கிறது. உண்மையில் ஓர் உயிர் இழக்கப்படுவதென்பது உலகின் எந்த சட்டத்தின் பார்வையிலும் மிகவும் பாரதூரமான ஒரு நிகழ்வு. எனவே ஓர் உயிரிழப்பானது ஏதேனும் ஒரு வகையில் சந்தேகத்துக்கிடமானதாக அமைந்திருந்தால், அதனை இனங்காண்பதற்கும், முடியுமானளவு அதற்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும், எதிர்காலத்தில் அவ்வாறான ஒரு நிகழ்வு நடக்காமல் தடுப்பதை உறுதிப்படுத்துவதற்குமெனத்தான் உலகெங்கும் இவ்வாறான ஒழுங்கு விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் மார்க்கத்தின் பெயரால் 'மதம்' பிடித்திருப்பவர்களுக்கு, இந்த ஒழுங்குகளின் பின்னாலுள்ள இஸ்லாம் புரிவதேயில்லை. எனவே தமது முட்டாள்தனத்துக்கும் அறிவீனத்துக்கும் ஈமானிய சாயம் பூசி, தாமும் கெட்டு சமூகத்தையும் குட்டிச் சுவராக்கும் வேலையை ஒப்பாரும் மிக்காரும் இன்றி செய்து வருபவர்கள் தாராளமாக இருக்கிறார்கள்.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது, குறித்த சிறுவனுக்கு தற்கொலை செய்யும் எண்ணம் வருமளவுக்கு ஒரு மானசீக அழுத்தத்தை ஏற்படுத்துவதில் குறித்த அந்த மௌலவி பெரும் பங்காற்றியிருக்கக் கூடும் என்றும், பின்னர் அது தற்கொலையாகவே இருந்தாலும், தனது மத்ரஸாவினுள் அது இடம்பெற்றதாகத் தெரிய வந்தால் தன்னால் இனி மத்ரஸா நடாத்த முடியாமல் போய்விடும் என்ற அச்சத்தால் 'தற்கொலை' என்ற பகுதியை மூடி மறைக்க முயற்சித்திருக்கக் கூடும் என்றுமே அனுமானிக்கலாம்.

ஆனால் இவற்றில் எது உண்மை? எது பொய்? என்பது நீதிமன்ற விசாரணைகளினூடாகவே தெரியவரும். பொதுவாகவே மக்கள் 'நீதி'மன்றமானது, நீதியையும் ஆதாரங்களையும் விடவும் உணர்ச்சிகளுக்கே முக்கியத்துவம் வழங்கும் என்பதற்கு எண்ணிலடங்காத உதாரணங்கள் இருக்கின்றன. எனவே மக்கள் மன்றத்தில் விசாரணைகளின்றி அவசரமாக தீர்ப்பு வழங்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அறிவுடமை நிச்சயம் அதற்கு ஆதரவளிக்காது.

இது கொலையோ அல்லது தற்கொலையோ எதுவாக இருப்பினும் சரி, குறித்த அந்த மௌலவியின் வசயஉம சநஉழசனஐப் பார்க்கின்ற போது, அவருக்கு சட்டரீதியாக உள்ள தண்டனைக்கு மேலதிகமாக, இவ்வாறான கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாழ்நாள் தடையொன்று விதிக்கப்படுவது கூட மிகவும் பொருத்தமாக இருக்கும். அதே நேரம் அப்படியான ஒரு தடையினால் அவருக்கு வருமானம் பாதிக்கப்பட்டு, தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக அவர் இன்னுமொரு சமூக விரோதியாக மாறாமலிருப்பதற்குரிய வகையிலான சமூக நல ஏற்பாடுகளைச் செய்வதும் பொதுவாக சமூகத்தின் மீதும், குறிப்பாக சம்பந்தப்பட்ட பிரதேசத்தவர்கள் மீதும் கடமையாகிறது. ஏனெனில், நாம் உணர்ச்சிவசப்பட்டு தண்டனை வழங்குவதில் முன்னணியில் நிற்பது போல், அதன் விளைவாக அதனை விடவும் பாரதூரமான இன்னொரு குற்றத்துக்கான வாயில் திறக்கப்படுகிறதா என்பதை ஒருபோதும் அலட்டிக் கொள்வதில்லை என்பதையும் கருத்திலெடுக்க வேண்டியிருக்கிறது.

மிக முக்கியமாக, இந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்து விதம்விதமான அரசியல்களும், பல்வேறு அஜென்டாக்களும் முன்னெடுக்கப்படலாம். ஆனால் எது எப்படிப் போனாலும், எமது பாரம்பரிய மத்ரஸாக் கல்வி முறைமையில் உள்ள கோளாறுகள் தொடர்பாக ஒரு ழளவஅழசவநஅ செய்வதற்கான மிகப் பொருத்தமான சந்தர்ப்பமாக இது அமைந்திருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

ஓர் உயிரிழப்புக்கு வழிகோலியிருக்கின்றது என்ற வகையில், நாம் கேள்விக்குட்படுத்த வேண்டிய பல்வேறு பகுதிகள் இருக்கின்றன.

நமது பாடத்திட்டங்கள் முதற்கொண்டு, கற்பித்தல் முறைமைகள் உள்ளடங்கலாக, நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் பயன்பாடுகளை எந்தளவுக்கு உள்ளீர்ப்பதனூடாக, மாணவர்கள் எதிர்நோக்கும் மிகை அழுத்தங்களிலிருந்து அவர்களுக்கு விடுதலை வழங்கலாம்? என்பதை இப்போதாவது நாம் சிந்திக்காவிட்டால், நாம் விரும்பாத மாற்றங்கள் - இந்த சம்பவத்தின் எதிரொலியாக - பலவந்தமாக எம்மீது திணிக்கப்படும் நிலை நிச்சயம் ஏற்படும்.

இதனை வாசிக்கும் போது, 'ஏன் மத்ரஸாக் கல்வி முறை பற்றி மாத்திரம் பேசுகிறீர்கள்? வேறு எங்கும் இவ்வாறான பிரச்சினைகள் கிடையாதா? நீங்களும் அவர்களது அஜென்டாவுக்கு வேலை செய்கிறீர்களா?' என்பன போன்ற கேள்விகள்தான் உங்களுக்குள் எழுகின்றதென்றால், நிச்சயம் நீங்களும் அந்தக் கல்வி முறையினால் ஊட்டப்பட்ட அழுத்தத்துக்குள் தத்தளித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதே அர்த்தம். அதற்கு ஒரு நல்ல மனநல மருத்துவரை நாடுவதே சிறந்த தீர்வாக அமையும். ஏனெனில் நான் இவ்வளவு நேரமாக என்ன சொன்னேன் என்பதை நீங்கள் சுத்தமாகப் புரிந்து கொள்ளவே இல்லை.

நாமாக மாற்றங்களை நோக்கி நகரும் போது அது ஆரோக்கியமாக இருக்கும். தலைநிமிர்ந்து நடக்கலாம். ஆனால் நம்மீது மாற்றங்கள் திணிக்கப்படும் வரையில் நாம் கவனயீனமாக இருந்தால், அதன் பிறகு வாலைச் சுருட்டிக் கொண்டு யாருடையவாவது காலை நக்குவதைத் தவிர வேறு தெரிவுகள் இருக்காது.



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

# காத்தான்குடிக்கு ஏன் இந்த அநீதி?

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர் - 5)

முயற்சிகள் முறியடிப்பு

முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை இவ்வளவு படுமோசமான நிலையில் இருப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சில தமிழ் சிவில் செயற்பாட்டாளர்களுமே காரணம். இவர்கள் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களைப் பற்றிய பிழையான பிம்பத்தை கட்டியெழுப்பியுள்ளனர் என நடுநிலை நோக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

2009ஆம் ஆண்டு அப்போதைய கிழக்கு மாகாண காணி அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவினால் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களுக்கும் மூன்று மாவட்ட குழுக்களும் மாகாண குழுவொன்றும் உருவாக்கப்பட்டது.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்படி குழுக்களை இயங்கவிடாமல் பாரிய தடையை விதித்தது.

தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் நிருவாக அதிகாரிகளும், முன்னாள் தமிழர் உரிமைப் போராட்ட ஆயுதக் குழுக்களின் அங்கத்தவர்களும், மட்டக்களப்பில் தமிழர்களின் காணிகளை முஸ்லிம்கள் அடாத்தாகக் கைப்பற்றியுள்ளனர் என்ற மிகப் பொய்யான பரப்புரையை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளனர். இந்த அப்பட்டமான பொய் பிம்பத்தை தகர்த்து உண்மையை உலகறியச் செய்ய வேண்டிய பொறுப்பை அனைத்து சமூகங்களையும் சேர்ந்த முற்போக்குச் சிந்தனையுடைழயோர் செய்ய வேண்டும்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் அமைப்புகளின் சம்மேளனம் காத்தான்குடி முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக ஒரு முன்மொழிவு ஆவண அறிக்கையைத் தயாரிக்க முடிந்தது.

காத்தான்குடி மக்கள் முகம்கொடுக்கும் காணி இல்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் அமைப்புகளின் சம்மேளனம் அதிகாரத் தரப்பினருக்கு கடந்த 2020ஆம் ஆண்டு டிசெம்பெர் 21ஆம் திகதி அனுப்பி வைத்திருந்த திட்ட முன் மொழிவின் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது

முன்மொழிவு-01

தற்போதிருக்கும் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவை மீள் எல்லை நிர்ணயம் செய்து அதனை இரண்டு பிரிவுகளாக ஆக்குதல். காத்தான்குடியின் மொத்த பரப்பளவு 6.5 சதுர கிலோ மீற்றர்கள்.

2020இல் செய்யப்பட்ட கணக்கெடுப்பின்படி 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 15273 குடும்பங்களைச் சேர்ந்த 50358 மக்கள் காத்தான்குடிப் பிரதேசத்தில் வசிக்கின்றனர்.

அதன் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு

தெற்கு: மண்முனை பற்று பிரதேச பிரதேச செயலக பிரிவு

கிழக்கு: வங்காள விரிகுடா

மேற்கு: மட்டக்களப்பு வாவி.

காத்தான்குடி 1901ஆம் ஆண்டு முதல் 1985ஆம் ஆண்டு முறைப்படி தனியான உதவி அரசாங்க அதிபர் (யுபுயு) பிரிவாக மாற்றப்படும் வரை மண்முனை வடக்கு பிரதேச இறைவரி அலுவலகத்தின் (ஞுசுழு) பிரிவின் கீழ் இருந்து வந்தது. இது 1992இல் பிரதேச செயலகப் பிரிவாக மாற்றப்பட்டது.

2020இல் உள்ளபடி காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில்

மக்கள் தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோமீட்டருக்கு 7747 ஆக உள்ளது. குறிப்பிட்ட சில கிராம அலுவலர் பிரிவுகளில், சுமார் 7338 மக்கள் வசிக்கின்றனர். இதன் காரணமாக தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதியாக காத்தான்குடி அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர அனுமதித்தால், இன்னும் 10 ஆண்டுகளுக்குள் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மேலும் மோசமடையும் என்று அஞ்சப்படுகிறது. காத்தான்குடியில் மக்கள் தொகை மிகவும் அடர்த்தியாக இருப்பதால், சுகாதாரம், குடியிருப்புகள் போன்றவற்றில் சொல்லவொண்ணா இன்னல்களை அங்குள்ள மக்கள் எதிர்கொள்கின்றனர்.

கர்தான்குடி மக்கள் மிக அதிகமான கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இங்கு எழும் பிரச்சினைகள் மற்ற அண்டை பகுதிகளிலும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கில். 1998ஆம் ஆண்டு நிலப் பரப்பு வர்த்தமானி உட்பட இன்னுமொரு பிரதேச செயலகப் பிரிவு தேவை என்று நாங்கள் முன்மொழிகின்றோம்.

இதற்கு மேலதிகமாக காங்கேயனோடை, சிகரம், கர்பலா, ஒல்லிக்குளம், பாலமுனை மற்றும் கீச்சாம்பள்ளம் ஆகிய இடங்கள் அசாதாரணமான சனத்தொகை அடர்த்தியின் காரணமாக, அங்கு வசிக்கும் மக்கள் பல்வேறு முக்கிய பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தள்ளப்பட்டுள்ளனர்.

அவற்றில் சில:

01. சுத்தமான குடிநீர் இல்லை.

02. சுகாதாரமும் சௌக்கியமும் இல்லை.

03. சுற்றுச்சூழல் மாசுபாடு அதிகரித்துள்ளது

04. குடியிருப்பதற்கு நிலம் இல்லை நிலத்தடி நீர் ஏற்கெனவே மாசுபட்டுள்ளதால் சுகாதாரம் மற்றும் சௌக்கியம் பாதிக்கப்பட பலமான சாத்தியக்கூறுகள் உள்ளன. மக்கள் தொகை அடர்த்தி காரணமாக பல்வேறு வகையான தொற்றுநோய்கள் எளிதில் பரவுகின்றன. நீரால் பரவும் நோய்களால் மக்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. சுற்றுச்சூழல் மாசுபாட்டால் மனிதர்களும் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். உதாரணமாக, காற்று மாசுபாட்டின் நீண்டகால வெளிப்பாடு நாள்பட்ட சுவாச நோய், நுரையீரல் புற்றுநோய் மற்றும் பிற நோய்களுக்கு வழிவகுக்கும்.

எதிர்காலத்தில், குடும்பங்கள் விரிவடையும்போது, காணிகள் வழங்கப்படாவிட்டால், மக்கள் சீவிக்க வாழ்விடங்கள் இல்லை. கொழும்பு மாநகரில் நிலவும் காணித் துண்டொன்றின் விலைத் தரத்தை விட காத்தான்குடிப் பிரதேசத்தில் காணியின் விலை அதிகரித்துள்ளது. நிலங்களை அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நெருக்கடியை முறியடிக்க, இடையில் குறுகிய இடத்தில் வீடு கட்டுவதைத் தவிர மக்களுக்கு தீர்வு இல்லை. காத்தான்குடியில் இந்தப் பாரிய காணிப் பிரச்சினையை புதிய விஸ்தரிக்கப்பட்ட பிரதேச செயலகம் உருவாக்கும் ஏற்பாட்டின் மூலம் மட்டுமே தீர்க்க முடியும்.

எனவே, அதற்கு சட்டப்பூர்வ நடைமுறையை வழங்க அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். காத்தான்குடி பிரதேச சபையின் தெற்கு எல்லையில் உள்ள ஒரு பிரதேசம் அண்மைக்காலமாக பரபரப்பான பிரச்சினையாக மாறியுள்ளது. இது கிழக்கில் உள்ள கடல் கடற்கரையிலிருந்து மேற்கே பிரதான சாலை வரை ஹைறாத் நகர் என்று அழைக்கப்படும் ஒரு வாழும் பகுதி. 12 மே 1987, 24 மே 1997 மற்றும் 11 டிசெம்பெர் 1998 ஆகிய மூன்று வர்த்தமானி அறிவிப்புகளின்படி, இந்தக் குறிப்பிட்ட பகுதி காத்தான்குடி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமானதாக இருந்திருக்க வேண்டும்.

இருந்தும், 1999இல் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டபோது, ஆரையம்பதி பிரதேச சபையைச் சேர்ந்த ஒரு குழுவினர், நியாயமற்ற முறையில் இந்த விடயத்தில் ஒரு பெரிய குழப்பத்தை உருவாக்கினர். இதனால் சர்ச்சைக்குரிய பகுதி இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது. இது ஒரு பெரிய குறைபாடு, உண்மையில். இது, அரசு நிர்வாகம் முறையாக செயல்படுவதற்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. எனவே இந்தப் பிரச்சினை மிகவும் அக்கறையுடனும் பொறுப்புடனும் தீர்க்கப்பட்டு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் என்று நாம் கருதுகின்றோம்.

முன்மொழிவு 2

தற்போதுள்ள காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் கிராம அலுவலர் பிரிவுகளின் அதிகரிப்பு

2020இல் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி 50358 மக்கள் தொகையுடன் ஏற்கனவே உள்ள காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவின் அளவு வெறும் 6.5 கிலோமீற்றர் மட்டுமே. மக்கள் தொகை 15273 குடும்பங்களைக் கொண்டது.

பொதுவாக 300 குடும்பங்களைக் கொண்ட ஒரு பிரிவுக்கு ஒரு கிராம உத்தியோகத்தர் பணிபுரிந்தால், இது 51 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த பிரதேச செயலகப் பிரிவு நீட்டிக்கப்பட்டபோது, மேலே உள்ள முன்மொழிவின்படி, இப்போது மண்முனை வடக்கின் கீழ் வரும் குடும்பங்கள் 3 கிராம அலுவலர் பிரிவுகளையும் இப்போது இருக்கும் 2112 குடும்பங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

புதிய கிராம அலுவலர் பிரிவுகளை ஸ்தாபித்தல்

காத்தான்குடியில் உள்ள மக்கள் தொகைக்கு 50 கிராம அலுவலர் பிரிவுகள் தேவை. ஆனால் தற்போது 18 கிராம அலுவலர் பிரிவுகள் மட்டுமே உள்ளன. இந்த நிலைமை பின்வரும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

1. பேரிடர்களின்போது குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளால் தங்கள் பிரிவுகளுக்குள் இருக்கும் மக்களை சரியாக கவனிக்க முடியவில்லை.

2. பேரிடர் சூழ்நிலைகளின்போது பயனாளிகளை நிர்வகிப்பதில் எப்போதும் தேவையற்ற தாமதங்கள் ஏற்படுகின்றன.

3. இந்தப் பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் பெரும்பாலும் வணிகத்தைச் சார்ந்து இருப்பதால் அவர்களுக்கு தனிப்பட்ட தேவைகள் உள்ளன, அவை கிராம அலுவலரால் கவனிக்கப்பட வேண்டும்.

வறுமை ஒழிப்பு முன்முயற்சிகளின்போது மக்கள் பெறும் இழப்பீடுகளின் சதவீதம் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாக உள்ளது, ஏனெனில் தற்போதைய கிராம அலுவலர் பிரிவுகள் பெரியதாக உள்ளன.

நிறைவாக காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவை மறுசீரமைப்புக்கான அவசியத்தையும் இன்றியமையாததையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். இது ஒன்றே மக்களின் துயரங்களுக்கு சாத்தியமான தீர்வாக இருக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். காத்தான்குடியை இரண்டு தனித்தனி பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும் என்ற எங்கள் முன்மொழிவு இரண்டாம்பட்சம் மட்டுமே.

நாம் வலியுறுத்துவது காத்தான்குடியை அண்டியுள்ள முஸ்லிம் குக்கிராமங்களை ஒன்றிணைத்து எல்லைகளை விரிவுபடுத்த வேண்டும். மேலும், தற்போதுள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து அவற்றின் எண்ணிக்கை 49 ஆக அதிகரிக்கப்பட வேண்டும். எங்கள் முன்மொழிவின்படி பிரதேச செயலாளர் பிரிவு பெருப்பிக்கப்படும்போது கிராம அலுவலர் பிரிவுகள் 62 பிரிவுகளைக் கொண்டிருக்கும்." என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால் இந்த விடயமும் இன்னமும் கிடப்பில்தான் உள்ளது. அதனால் காத்தான்குடி மக்களும் குடியிருக்க காணியில்லா அவஸ்தைக்கு ஆட்பட்டுள்ளார்கள்.

காத்தான்குடிப் பிரதேசத்தில் 2021ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 3243 குடும்பங்கள் காணியற்றோராக உள்ளனர் என்று காத்தான்குடி பிரதேச செயலக உதவிச் செயலாளர் எம்.எஸ். சில்மியா தெரிவித்தார்.

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்.. வரும் வாரமும் வரும்)



# அரச தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர்கள் போதுமானளவு இருக்கிறார்களா?

## – அதிபர்கள் பதில் சொல்லட்டும் என்கிறார் மனோ கணேசன் எம்பி

தமிழ் பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில, தொழில்நுட்ப ஆசிரியர்கள் நாட்டில் போதுமானளவு இருக்கிறார்களா? அல்லது இல்லையா? இது இன்று தமிழ்ஃபாடசாலைகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையா? அல்லது இல்லையா?

நேற்று பாராளுமன்றத்தில், தமிழ் பாடசாலைகளில், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை கடுமையாக நிலவுகிறது என்று சொன்னேன். மலையக பல்கலைகழகம் கட்டாயம் வேண்டும். ஆனால், அதற்கு முன் நமது மாணவர் பல்கலை செல்வதற்கான "கல்வி பாதையை" வெட்டுவோம் என்றும் சொன்னேன். அதுதான் மேலே சொன்ன பாட விதானங்களுக்கான விசேட தமிழ் மொழிமூல ஆசிரியர் பயிற்சி கலாசாலை என்றும் சொன்னேன்.

எனது கருத்துகள் சரியா? பிழையா? என தமிழ் பாடசாலை அதிபர்கள் முதலில் பதில் சொல்லட்டும். அதையடுத்து, அரசாங்க பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை நம்பி அனுப்பும் அப்பாவி தாய்மார், தந்தைமார் பதில் கூற வேண்டும். கல்வியிலாளர்கள், சமூக உணர்வாளர்கள் பதில் கூறட்டும். எனது நேரடி 0777312770 வாட்சப் எண்ணுக்கு அல்லது எனது நேரடி டநயனநஎழனெகயடெயெ.ழசப என்ற மின்னஞ்சலுக்கு பதில்களை அனுப்பட்டும்.

இல்லாவிட்டால், நான் சொல்வதை எல்லாமே எதிர்த்து கட்சி அரசியல் செய்கின்ற, கல்வியை பற்றி எந்தவித தூரப்பார்வையும் இல்லாத அரசியல்வாதிகள் கையில், தமிழ் பிள்ளைகளின் கல்வியை ஒப்படைத்து விட்டு, தந்தை செல்வா சொன்னது போல், "கடவுள் காப்பாற்றுவார்" என ஒதுங்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

மத்திய கொழும்பு பாடசாலை பெற்றோர்-பழைய மாணவர் மத்தியில் உரையாடிய மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

மலையகம் என்றால், "மலைகளை" மட்டும் தேடி ஓடாதீர்கள். கொழும்பின் அரசாங்க பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும், இங்கு வந்து தொழில் நிமித்தம் குடியேறியுள்ள பாமர மலையக மக்களின் பிள்ளைகள்தான் என்றும் கூறினேன். அதேபோல் கிளிநொச்சி, வன்னி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இருந்தும் தொழில் நிமித்தம் குடியேறியுள்ள பிள்ளைகளுந்தான் கொழும்பின் அரசாங்க பாடசாலைகளில் மாணவர்கள்.



எனது நோக்கம், இத்ஹதான். தமிழ் மொழிமூல, இரசாயனம், பௌதிகம், உயிரியல், புவியல், அரசறிவியல், கணக்கீடு, வணிகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களை விசேட பயிற்சி அளிக்கும் ஆசிரிய பயிற்சி கலாசாலை அமைய வேண்டும். அவர்களை, கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, பதுளை, கம்பஹா, மொனராகலை, குருநாகலை, புத்தளம், காலி, மாத்தறை ஆகிய மாவட்ட தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்பதாகும். அவசியப்படும் வன்னி, கிழக்கு மாகாண பாடசாலைகளிலும் நியமிக்க வேண்டும்.

நியமிக்கப்படுபவர்கள் குறைந்த பட்சம் பத்து வருடங்கள் அதே பாடசாலையில் பணி செய்ய வேண்டும். தவிர்க்கமுடியாத இடமாற்றம் வேண்டுமென்றாலும்கூட, அதே பாடத்துக்கான மாற்று ஆசிரியர் கிடைத்தே பிறகே இடமாறி செல்ல வேண்டும்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நோக்கி நேற்று நாடாளுமன்றத்தில், தயவு செய்து பாரத பிரதமர் மோடி, மலையக மக்கள் நல்வாழ்வுக்காக தருவதாக உறுதியளித்துள்ள, இலங்கை ரூபா.300 கோடிக்கும் குறையாத நிதியை "தமிழ் மொழிமூல" ஆசிரியர் பயிற்சிக்கான விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலை அமைக்க பயன்படுத்துங்கள் என்றும் சொன்னேன். மலையக பல்கலைக்கழகம் அதையடுத்து வரட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கு இப்போது அவசரப்பட வேண்டாம் என்றுதான் சொன்னேன்.

இலங்கை அரசாங்கத்தின் திட்டங்கள் மலையக மக்கள் தொடர்பில் நடக்கட்டும். ஆனால், பாரத பிரதமர் நரேந்திர மோடி வழங்கும் நிதியை, இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும், இலங்கை அரசின் கல்வி அமைச்சும் இணைந்து பயன்படுத்த வேண்டும். இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தில் உள்ள "இலங்கை தோட்ட தொழிலாளர் கல்வி அறக்கட்டளையை, மீண்டும் புதுபித்து, அதன் நோக்கங்களை விரிவிபடுதி இதை செய்து தாருங்கள் என நேற்றுக்கூட நான் பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நோக்கி சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும் கூறினேன் - என்றார்.



மூதூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சுயதொழில் செய்யும் பயனாளிகளுக்கு சமூக சேவைதிணைக்களத்தின் அனுசரணையில் சுயதொழில் மாணியக் கொடுப்பனவு செவ்வாயன்று (5) அன்று பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக. இனால் வழங்கி வைக்கப்பட்டது.

(மூதூர்.எஸ்.ஏ.பரூஸ்)



துபாயில் நடைபெற்ற ஐ.நா. காலநிலை மாற்றங்கள் மகாநாட்டில் கலந்து கொண்ட பேருவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஹஸீப் மரிக்கார் ஸ்கொட்லாந் பிரதமர் ஹம்சா யூஸூபினைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

# மீயல்லை மண்ணுக்கு பெருமை சேர்க்கும் அல்-மினா தாயின் பிள்ளைகள்

(ஹரீஸ் சாலிஹ்)

இவ்வருடம் நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை-2023 பெறுபேறுகள் அண்மையில் வெளி வந்தன. மீயல்லை அல்-மினா பாடசாலையின் வரலாற்றில் முதன் முறையாக 9யு சித்திகளைப் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார் மாணவன் தவ்லத் கான் அம்மார் யாஸிர். இதே போல் இவர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் மிகவும் திறமை காட்டி கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அல்-மினா வின் மாணவி எம்.ஏ. ஸல்ஹா 8யு சித்திகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். ஏனைய பல மாணவ மாணவிகளும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். பல மாணவ மாணவிகள் மிகவும் கஷ்டமான பொருளாதார நிலையில் இருந்தும் கூட சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பரீட்சையில் திறமை காட்டி சித்தியடைந்து எமது



கிராமத்துக்கு பெருமை சேர்த்தித் தந்த அனைத்து மாணவச் செல்வங்களையும் வாழ்த்தி மகிழ்கிறோம். மாணவர்களை சித்தியடைய வைப்பதில் பெரிதும் பங்காற்றிய அதிபர் உட்பட அனைத்து ஆசிரிய, ஆசிரியை களுக்கும் பெற்றோர்கள், ஊரார்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என தென்மாகாண முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். ஜே முஹம்மத் தெரிவித்தார்.

# ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளருடன் மக்கள் காங்கிரஸ் தலைவர் சந்திப்பு!



பலஸ்தீன மக்களின் அவல நிலை மற்றும் இலங்கையில் நீண்டகால இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபை தீவிரமாக கவனஞ்செலுத்த வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரை ஐ.நா தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

"ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரை சந்தித்ததில் மகிழ்ச்சியடைகின்றேன். பலஸ்தீனின் அவல நிலை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடினோம். பலஸ்தீன் - இஸ்ரேல் மோதலை உடன் நிறுத்தும் வகையில், ஐ.நா. நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி, 159 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய மகஜர் உரியவர்களிடம் சென்றடைந்துள்ளதாக வதிவிட ஒருங்கிணைப்பாளர் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், நீண்டகால இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றத்துக்கு எதிர்காலத்தில் ஐ.நா.வின் ஆதரவு குறித்தும் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வெறுப்புப் பேச்சுக்கள் பற்றியும் இருவரும் கலந்துரையாடினோம்" என்று கூறினார்.

# மின்சாரத்தை துண்டிக்கச்சென்ற மின்சார சபை ஊழியர்கள் மீது தாக்குதல்

(ஐ. ஏ. காதிர் கான்)

மின் கட்டணம் செலுத்தாத நிலையில், மின்சாரத்தைத் துண்டிக்கச் சென்ற மின்சார சபை ஊழியர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம், கம்பஹா நகரில் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலுக்கு இலக்கான இரு ஊழியர்களும், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக, மின்சார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, மின் கட்டணம் செலுத்தாததால், சுமார் 7 இலட்சம் மின்சார பாவனையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக, இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜீலானில் பழைய மாணவர் சங்க அங்கத்துவ தெரிவு

(யாழ். ஃரீட் இக்பால்)

பாணந்துறை ஜீலான் மத்திய நவோதய கல்லூரியில் (தேசிய பாடசாலை) 2024, 2025 ஆம் ஆண்டுக்குரிய பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்துவ தெரிவு அதிபர் ஏ. எம்.ஹலீம் மஜீத் தலைமையில் பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் நிழ்வான் (இஸ்லாஹி) அவர்களின் முன்னிலையில் அண்மையில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக எஸ்.ஏ.ஸி.எம். இம்தாத், உதவி செயலாளராக எம்.ஏ.நிஸ்னி அஹமட் ஆகியோரும் பழைய மாணவிகள் சங்கத்தின் செயலாளராக பஸ்னா இக்பால், உதவி செயலாளராக மனால் அம்றாஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பழைய மாணவர் சங்கத்தில் எம். மிப்றாஸ் (பொருளாளர்), எம்.எப்.ஏ. காலிக் (உதவி பொருளாளர்) செயற்குழு உறுப்பினர்களாக இஸட்.எச்.எம். நிஸ்றின், ஏ.ஸி. அஷ்ஷர், எம். ஆர்.எம். றம்ஸான், எம்.டி.எம்.இல்ஹாம், எம். எப்.எம். பயாஸ், பீ.எப்.எம்.நிஸார்ட், எம். ஐ.எம் .இர்பான், எம்.டபிள்யூ. எம். பர்ஹான் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.



கொழும்பு தமிழ் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபத்தில் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வின் போது காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்களுக்கு கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் சிறுவர் இலக்கியம் எனும் தலைப்பில் உரை நிகழ்த்திய இராசேந்திரன் அவர்களும் அருகில் காணப்படுகிறார்.

## மனநலமும் ஆலோசனையும் 09

# மண வாழ்வில் புரிதல்

தம்பதிகளிடையே ஒருவரையொருவர் பற்றிய ஒரு தெளிவான புரிதல் இருந்தால் அவர்கள் இருவருக்கும் இடையே நல்ல எதிர்பார்ப்புகள் உருவாக ஆரம்பிக்கும். ஒரு திருமணம் தொடர்ந்து ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டுமானால் அங்கு தரமான புரிதல் கட்டாயம் இருக்க வேண்டும். மணவாழ்வை மணக்க வைப்பது அழகான ஆழமான புரிதல்.

ஒரு தம்பதியினருக்கு இடையே மன உறவில் சரியான புரிதல் இல்லாவிட்டால், அது தவறான புரிதல்களை உருவாக்க வழிவகுத்து விடும். பிழையான புரிதலால் தவறான அனுமானங்களை உருவாக்கி விடும். ஒருவரையொருவர் பற்றிய தவறான அனுமானங்கள் இருவரும் மோதல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை இலகுவாக உருவாகிவிடும். அதேவேளை ஒருவருக்கொருவர் மேம்பட்ட புரிதல் இருந்தால் அழகான உறவு உருவாகும். அன்பும் அமைதியும் நிலைக்க ஆரம்பிக்கும். ஆரோக்கியமான, மகிழ்ச்சியான திருமணம் இந்த மண்ணில் மலர காரணமாகிவிடும்.

தம்பதிகள் இருவரும் ஒருவர் மற்றவரைப் புரிந்துகொள்வது இருவருக்கும் இடையேயான வலுவான உறவு வளர்வதற்கு இன்றியமையாதது என்பதைக் நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

வாழ்க்கைத் துணைவர்களின் அனுபவங்கள், ஆசை ஆர்வங்கள், எதிர்பார்ப்புகள் பற்றிய அதிக புரிதல் ஆரோக்கியமான உறவுகளை ஊக்குவிக்கிறது.

திருமணத் தொடர்பில் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதான உணர்வு மண் இணைப்பில் ஆழமாக செல்வாக்குச் செலுத்துகின்றது.

"நான் உன்னை புரிந்து கொள்கிறேன்" என்பதும் "நான் உன்னால் புரியப்படுகிறேன்" என்ற உணர்வும் இருவருக்கும் இடையே எவ்வளவுக்கு எவ்வளவு வளருமோ அங்கே அவ்வளவு புரிதல் வளர்ச்சி அடையத் தொடங்கும்.

திருமணத்தில் இரு பங்குதாரர்களும் அனுபவிக்கும் மகிழ்ச்சியை மேம்படுத்துவதில் முக்கிய அம்சமாக இருப்பது இந்த புரிதலாகும்.

நீங்கள் விரும்புகின்ற உங்கள் துணையை புரிந்து கொள்ள விரும்பினால்

அவரின் ஆசை ஆர்வங்கள், இயல்பான குணங்கள், குடும்ப உறவுகள் பற்றி அறிய முயற்சி செய்யலாம். எமக்குத் தெரியும்.... ஒவ்வொருவருக்கும் ஒரு கதை இருக்கலாம்.

மதிப்புகள் இருக்கலாம்.

எதிர்பார்ப்புகள் இருக்கலாம்.

வித்தியாசமான ஆற்றல்கள் இருக்கலாம்.

ஒழுக்கங்கள் இருக்கலாம்.

அவரவர் ஆசை ஆர்வங்கள் வேறுபடலாம்.

அதனால் உங்கள் துணையின் பின்னணியைக் கற்றுக்கொள்ளுங்கள். அப்படி கற்றுக் கொள்ளவது உங்களை ஆச்சரியப்படுத்தலாம்.

அது அவரை அதிகம் நேசிக்க அனுமதிக்கலாம். அதனால்

உங்கள் துணை பற்றி அறிய நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் விரும்பும் உங்கள் வாழ்வின் பங்குதாரரை ஆழமாக புரிந்து கொள்ள ஆர்வம் காட்டுங்கள்.

உங்கள் துணையுடன் அழகாக தொடர்பு கொண்டு அவரிடம் சில சுவாரஸ்யமான கேள்விகளைக் கேளுங்கள்.

அவரின் கடந்த காலம்,
கல்வி அனுபவங்கள்,
ஆசை ஆர்வங்கள்,
அவர் சந்தித்த சூழ்நிலைகள்,
முகம் கொடுத்த சவால்கள்,
பெற்ற வெற்றிகள்
அவற்றால் அனுபவித்த உணர்வுகளைப் பற்றி மனம் திறந்து பேச அவர்களை ஊக்குவிக்கலாம்.

உதாரணமாக

இங்கே குறிப்பிடப் பட்டுள்ளது போன்ற சில கேள்விகளை உங்கள் துணையிடம் கேட்கலாம்:

- "நீங்கள் அடைந்த அடைவுகள் என்ன?"
- "நீங்கள் கற்றுக்கொண்ட மிகவும் சுவாரஸ்யமான உண்மைகள் என்ன?" அவற்றை அறிய ஆசைப்படுகிறேன்.
- "ஒரு பௌர்ணமி இரவு உங்களுக்கு எப்படி இருக்கும்?"
- "உங்களை மிகவும் ஊக்கப்படுத்தும் விடயங்கள் என்ன?"
- "வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்று நினைக்கிறீர்கள்?"
- "வாழ்க்கையில் உங்கள் நோக்கம் என்ன?"
- "உங்கள் வாழ்க்கையில் எவற்றை மாற்ற விரும்புகிறீர்கள்?"
- "எந்த விடயங்கள் உங்களை மாற்றுவதில் இருந்து தடுக்கின்றன?"
- "உங்களுடைய சிறந்த குணங்கள் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"
- "உங்களில் என்ன குணத்தை அதிகமாக வளர்க்க விரும்புகிறீர்கள்?"
- "உங்கள் உடலை எந்த முறைகளில் ஆரோக்கியமாக வைக்கிறீர்கள்?"
- "நான் இதுவரை செய்த அன்பின் எந்த வெளிப்பாடுகளை நீங்கள் மிகவும் பாராட்டுகிறீர்கள்?"

இவைபோன்ற கேள்விகள் அழகான உரையாடலாக ஆகி இருவருக்கும் இடையே நல்ல புரிதலை ஏற்படுத்தி நெருக்கத்தையும் நேசத்தையும் வளர்க்க காரணமாக அமையலாம். ஒருவரையொருவர் அதிகம் பாராட்டிக் கொள்ள வழியாகவும் அமையலாம்.

இந்த வழியில்....

உங்கள் துணை யார், அவர் எப்படிப்பட்டவர், அவரின் விருப்பு வெறுப்புகள் என்ன, ஆசை ஆர்வங்கள் என்ன, எதை செய்ய விரும்புகிறார் போன்ற விடயங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள அமைதியாக உரையாடுங்கள்.

இது உங்கள் புரிதலை மேம்படுத்தும்.

அழகான உரையாடல் உங்கள் புரிதலை பலப்படுத்தும்.

நல்ல புரிதல் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆரோக்கியத்தை தரும்.

மணவாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

தொடரும்...



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

05 ம் பக்கத் தொடர்ச்சி....

போன பிரதேசமாகும். அத்துடன் கொடை வள்ளல்கள்,சன்மார்க்கப் பெரியார்கள் என்று பல முன்னோடிகள் அவ்வப்போது பிறந்து வாழ்ந்து வரும் சிறப்பு வாய்ந்த இடமாகும். இவற்றை விட கல்வி மேம்பாட்டுக்காக கை கொடுத்து வரும் உன்னதமிக்க ஊராகவும் இன்று விளங்குகிறது.

இந்த வரிசையில் இன்று அப்ராஸ் அப்துல்லா மற்றும் நைபீல் நிஸ ாம் ஆகிய இரு இளம் இரத்தினக்கல் வர்த்தகப் பிரமுகர்களின் முயற்சியால் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டிடம் ஒரு சாதாரண கட்டிடமல்ல. இதனூடாக கல்விப்பரம்பரை பல்கிப் பெருகி கியாம நாள் வரையிலும் கல்விக்காக கை கொடுத்துக்கொண்டே இருக்கும் நிலை பேறான தர்மத்தில் அடங்கும் ஓர் உன்னத தர்மத்தில் அடங்கும் ஒன்றாகும்.

ஒரு காலத்தில் இங்குள்ளவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காது இரத்தினக்கல் வர்த்தகத்தில் இறங்குவதால் பத்தை இரத்தினக்கல் (அதாவது பத்த வர்த்தக சந்தையாலே) பிள்ளைகள் படிப்பை கைவிடுகிறார்கள் என்றொரு ஆதங்கம் இருந்து வந்தது. அதனையும் முறியடித்து இன்று இந்த அபிவிருத்தி கல்விக்கூடம் பத்தை இரத்தினக்கல் வர்த்தகம் சந்தை பகுதியில் திறந்து வைக்கப்படுவது பத்த பொருளாதாரத்தோடு கல்வி வளர்ந்ததிற்கும் கைகொடுக்கும் உயர்ந்த இடம் என்பதை சர்வதேசத்திற்கும் காட்டப் போகிறது என்பதைக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

ஒரு சமூகத்தின் நிழை நேரான முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் கை கொடுப்பது கல்வி தான் வியாபாரங்கள் மாறும் வியாபாரத்தின் போது அதிலே எழுச்சியும் சில சமயத்தில் வீழ்ச்சியும் ஏற்படலாம் தற்போது இந்த சீனன் கோட்டை ஊர் அல்லாஹ்வின் கிருபையினால் வியாபாரத்தில் நல்ல நிலையில் உள்ளன.இதை விட சிறந்த நிலைக்கும் மாற அல்லாஹ் அருள் புரிய வேண்டும்.கல்வி எக்காலத்திலும் ஒரு சமூகத்திற்கு கை கொடுத்துக் கொண்டே இருக்கும்.சீனன் கோட்டை அறிவுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் பாராட்டத்தக்கது.இந்த ஊர் பணத்தையும் பொருட் செல்வத்தையும் பெற்றுள்ளது. பணச் செல்வத்தை பெற்றுள்ளதைப் போல் அறிவுச் செல்வத்தை பெற்ற ஊராக மார வேண்டும் என்ற நோக்கோடு இந்த ஊர் நகர்ந்து கொண்டு இருக்கிறது.அதற்கான எல்லா ஆரோக்கியமான அறிகுறிகளும் தெண்படுகின்றன.

எந்த ஒரு பணியையும் செவ்வனே முன்னெடுத்துச் செல்ல பணம் தேவை அதன் மூலம் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

இரத்தினக்கல் வர்த்தகத்தில் இந்த இருவரும் ஒரு படி எழுந்து வருகின்ற இளம் வியாபாரிகளாவர். அவர்கள் பெரிய நிலையான சொத்துக்களை வைத்திருப்பவர்கள் அல்லர்.

இந்த கல்வி நிலையத்தை உருவாக்கிய இந்த இளம் வர்த்தகர்கள் தம் குடும்பத்தயோ அல்லது உறவு களையோ பற்றி சிந்திக்காது எமது சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டுக்காக கை கொடுத்திருக்கும் முன்மாதிரியை காலா காலம் எமது மக்கள் போற்றி புகழவே செய்வார்கள்.

இது சீனன் கோட்டையின் கல்வி மேம்பாட்டிற்கு பின்புலமாக அமைகின்ற ஒரு மகத்தான பணியாகத்தான் நாம் இதை பார்க்க வேண்டும் என்றார்.

அல்ஹுமைஸரா அதிபர் எம்.ஸ ி.இப்ராஹிம் உரையாற்றுகையில்,

ஒரு சமூகத்தின் அடையாளம் கல்வியிலேயே தங்கியிருக்கிறது. இன்று கல்வி விருத்திக்காக இந்த கட்டிடம் திறந்து வைக்கப்படுகிறது.சீனன்கோட்டையின் கல்வி வளர்ச்சியில் இன்று மற்றுமொரு மைக்கல்லை தொட்டுள்ளது.

இதற்கான அத்திவாரம் போட்டதிலிருந்து கட்டிடம் எழுப்பப்பட்டு இறுதிக் கட்டிடத்தில் தான் இதற்கு வித்திட்ட இரண்டு சமூக முன்னோடிகளும் யார் என்பது வெளிச்சத்திற்கு வந்தது.எத்தகைய ஆரவாரமுமின்றி இவர்களது சமூகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பேருவளை இரத்தினக் கல் வர்த்தகம்,பொருளாதாரம்,கொடைகள் என்று நாட்டுக்கு முன்னோடியாகத் திகழ்வது போன்று இன்று கல்வி இதயத்திலும் சிறப்பிடம் பிடித்து வருகிறது.

குடிப்பரம்பல் மற்றும் பொருளாதாரத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு தலைமை வகிப்பது போல கல்வி மேம்பாட்டிலும் தலைமை வகிக்க முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.அதே போன்று அல்/ஹுமைஸராவும் இந்நாட்டு முஸ்லிம் பாடசாலைகள் அனைத்திற்கும் முன்னோடியாக மிளிரும் காலம் வெகு தூரத்தில் இருக்காது என்பதற்கு இன்று நிகழும் நிகழ்வுகள் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

இக்கல்வி நிலையம் மூலம் ஊரின் முக்கியத்துவம் மேலும் உயர்கிறது.இரத்தினக்கல் மூலம் கிடைக்கும் வருமானத்திலும் மேலான வளமும் கல்வி வளமும் மேலும் பெருவதற்கான வழி பிறக்கிறது.எனவே இதற்கான முன்னெடுப்புகள் மிகவும் மதி நுட்பத்துடன் நகர்த்தப்பட்டால் ஒளிமயமான எதிர்காலம் மிக விரைவில் உதயமாகும் என்பதில் ஐயமில்லை என்றார்.

சீனன் கோட்டை பள்ளிச் சங்க இனண பொருளாளர் ஸவாஹிர் ஸரூக் உரையாற்றுகையில்,

ஆன்மீக கல்வி,உலகக் கல்விக்காக முஸ்லிம் சமூகத்திற்கு கை கொடுப்பதில் சீனன் கோட்டை முன்னேடியாகத் திகழ்கிறது. மர்ஹூம் எம்.ஐ.எம்.நளீம் ஹாஜியார் அதற்கான பாதையைத் காட்டிச் சென்றார். காலத்திற்குக் காலம் கொடை வள்ளல்கள் தோன்றி இவ்வாறான நற்பணிகளை செய்கிறார்கள்.அந்த வரிசையில் இந்த இளம் வர்த்தகர்கள் இருவரும் மிகவும் பெருமதி வாய்ந்த கட்டிடமொன்றை அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.இந்த உயர்ந்த கைங்கரியம் எமது ஊருக்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் முழு நாட்டிற்கும் ஒரு முன்மாதிரியாகும்.மர்ஹூம் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான கல்வி அபிவிருத்திக்கான வருமானம் பெறும் கட்டிடமொன்றை அமைக்க வேண்டும் என்ற ஆசையுடன் இருந்தார் அதற்காக 15 லட்சம் ரூபாவையும் பெற்றுத்தர உறுதியளித்திருந்தார்.எமது 40 வருட கனவு இன்று நனவாகிறது.இந்த உயர்ந்த பணியை செய்து தந்த இளம் வர்த்தகர்களான அப்ராஸ் அப்துல்லா மற்றும் நைபீல் ரிஸ ாம் ஆகியோருக்கு இவ்வூர் மக்கள் சார்பாக நன்றி தெரிவிக்ககிறேன் என்றார்.

# வெற்றிகரமான உரிமைப் பங்கு வழங்கலைத் தொடர்ந்து அமானா வங்கியின் மூலதனம் ரூ. 20 பில்லியனைக் கடந்தது

- சவால்கள் நிறைந்த சூழலிலும் ரூ. 6 பில்லியன் திரட்டல்
- உறுதியான வெளிநாட்டு, கூட்டாண்மை மற்றும் உறுே பங்குபற்றலை வெளிப்படுத்தியது

வங்கியியல் துறைக்கு வழங்கப்பட்டிருந்த ஒழுங்குபடுத்தல் வழிகாட்டுதல்களின் பிரகாரம் மேம்படுத்தப்பட்ட குறைந்த மூலதன தேவைப்பாட்டு இலக்குகளை வெற்றிகரமாக எய்தி ரூ. 6 பில்லியனை உரிமை பங்கு வழங்கலினூடாக திரட்டியுள்ளதாக கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக்கு அமானா வங்கி அறிவித்துள்ளது. இந்த உரிமைப் பங்கு வழங்கலின் போது வங்கியின் ஏற்கனவே காணப்படும் பங்குதாரர்கள் மற்றும் வெளிநாட்டு, கூட்டாண்மை மற்றும் உறுே பங்கேற்புடனான புதிய முதலீட்டாளர்களும் ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த உரிமைப் பங்கு வழங்கலினூ டாக சுமார் 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்திருந்ததுடன், பிரதான பங்குதாரரான யுயுயு தரப்படுத்தலைக் கொண்ட ஐளனுடீ குழுமத்தின் மொத்த முதலீட்டு பெறுமதியை 25 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமானதாக உயர்த்தியிருந்தது. இதனூடாக சவால்கள் நிறைந்த சூழலிலும், இலங்கையிலும் அமானா வங்கியிலும் கொண்டுள்ள தொடர்ச்சியான நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தது. நாட்டில் நிலவிய மிகவும் சவால்கள் நிறைந்த காலப்பகுதியிலும் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றிருந்தமைக்காக இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச வணிகச் சிறப்பு விருது வழங்கி அமானா வங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2021 ஆம் ஆண்டு முதல் அமானா வங்கியின் பங்குகளை கையகப்படுத்தலை ஆரம்பித்திருந்த பன்முகப்படுத்தப்பட்ட ஈடுபாட்டைக் கொண்ட நன்மதிப்பைப் பெற்ற செந்தில்வேல் ஹோல்டிங்ஸ், உரிமைப் பங்கு வழங்கலிலும் உறுதியான பங்குபற்றலை வெளிப்படுத்தி, அமானா வங்கியின் 2ஆவது அதிகூடிய பங்குதாரர் எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்திருந்தது.

கடந்த சில வருடங்களில் பல்வேறு வெளியக சவால்களுக்கு மத்தியிலும் துரித மீட்சியை வெளிப்படுத்தியிருந்த அமானா வங்கி, தொடர்ச்சியாக உயர்வான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தது. இந்த நேர்த்தியான பெறுபேறுகளின் காரணமாக, அமானா வங்கி ஆறு தொடர்ச்சியான வருடாந்த பங்கிலாபங்களை வெளியிட்டு, பங்குதாரர்களுக்கு பெறுமதியை வழங்குவதற்கான அர்ப்பணிப்பை உறுதி செய்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் வங்கி தனது சிறந்த வருடாந்த வரிக்கு முந்திய இலாபத்தை பதிவு செய்திருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் இந்தப் பெறுமதி ஏற்கனவே அதிகரித்திருந்ததுடன், இந்த நிலை தொடரும் என வங்கி எதிர்பார்க்கின்றது.

அமானா வங்கியின் மக்களுக்கு நட்பான வங்கி மாதிரிக்கு தொடர்ச்சியாக கிடைத்திருந்த ஏற்றுக் கொள்ளலின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ. 100 பில்லியன் எனும் பெறுமதியை கடந்திருந்தது. இந்தப் பெறுமதியை வேகமாக எய்திய வங்கி எனும் பெருமையையும் அமானா வங்கி தன்வசம் கொண்டுள்ளது. தற்போது உரிமைப் பங்கு வழங்கலினூடாக திரட்டப்பட்ட தொகையுடன், ரூ. 150 பில்லியனுக்கு அதிகமானதாக அமைந்துள்ளது. மேலும், வட்டிசாராத மாற்று வங்கியியல் துறையில் தனது தலைமைத்துவத்தை மீள உறுதி செய்யும் வகையில், ஏசியன் பாங்கர் அமைப்பினால் உலகின் சிறந்த 100 உறுதியான இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக அமானா வங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

அதிகரித்துச் செல்லும் கீர்த்தி நாமம் மற்றும் உறுதியான வர்த்தக நாம ஏற்றுக் கொள்ளலுடன், அண்மையில் வெளியிடப்பட்டிருந்த டுஆனு டீசயனெ குயைெஉந இன் இலங்கையின் சிறந்த 100 மிகவும் பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் வரிசையில் 81 ஆம் ஸ்தானத்திலிருந்து 67 ஆம் ஸ்தானத்துக்கு அமானா வங்கி





முன்னேறியிருந்தது. தமது வர்த்தக நாம பெறுமதியில் நேர்த்தியான வளர்ச்சியை பதிவு செய்த சில வர்த்தக நாமங்களில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பரலி கருத்துத் தெரிவிக்கையில், "சவால்கள் நிறைந்த பொருளாதார சூழலிலும் உரிமைப் பங்கு வழங்கலினூடாக ரூ. 6 பில்லியனை எமது பெறுமதி வாய்ந்த பங்குதாரர்களிடமிருந்து திரட்டிக் கொள்ள முடிந்ததையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். எமது நோக்கத்தில் அவர்களின் நம்பிக்கையினூ டாக, ஆகக்குறைந்த மூலதன இருப்பு ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை எம்மால் பூர்த்தி செய்ய முடிந்ததுடன், எமது மூலதன போதுமை நிலையை வலிமைப்படுத்த முடிந்துள்ளது. இந்த வெற்றிகரமான செயற்பாட்டுடன், அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அமானா வங்கி தன்னை தயார்ப்படுத்தியுள்ளதுடன், தனது பெறுமதி வாய்ந்த பங்குதாரர்களுக்கு வெகுமதிகளை வழங்கவும் தயார்ப்படுத்திய வண்ணமுள்ளது." என்றார்.

அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்ஃபிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "சவால்கள் நிறைந்த சந்தைச் சூழலில் வெற்றிகரமாக உரிமைப் பங்கு வழங்கலை பூர்த்தி செய்ய முடிந்தமையானது, எமது ஏற்கனவே காணப்படும் பங்குதாரர்களின் தளராத நம்பிக்கை மற்றும் ஆதரவை மேலும் உறுதி செய்துள்ளதுடன், புதிய முதலீட்டாளர்கள் எமது பிரத்தியேகமான மாதிரி மற்றும் பெறுபேறுகளில் கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளது. இந்த மூலதன உள்ளீட்டினூடாக, எதிர்கால வளர்ச்சிக்கு எமக்கு உறுதியான வழி ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், எமது பிரதான வியாபாரச் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்து, பங்குதாரர்களின் முதலீடுகளுக்கு கவர்ச்சிகரமான பெறுமதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கின்றோம். உரிமைப் பங்கு வழங்கல் இலக்குகளை வெற்றிகரமாக நிவர்த்தி செய்வதில், எமது ஒழுங்குபடுத்துநர்கள் வழங்கியிருந்த ஆதரவுக்கும், வழிகாட்டல்களுக்கும் இந்தத் தருணத்தில் நான் நன்றி தெரிவிக்கின்றேன்." என்றார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.